ஆசிரியர். மு.கருணாநிதி

முரசு 2 | சென்னை | 15—4—55 | வெள்ளி | ஒலி 3

# 2. மனித உற்பவ காண்டம்.

பூமி மனிதர்கள் தோன்ற பண்படுவதற்கு முன்னரே நெருப்புக் கோளமாக இருந்தது—என்று சொல்கிறது விஞ்ஞானம். ஆனால் கிரேக்க புராணமோ ஒரு தனி சிருஷ்டி தத்துவத்தை எழுப்பியிருக்கிறது.

பாமர மக்களைவிட இந்தப் புராண கதைகள் பண்டித மணிகளின் கற்பனையிலேதான் உருவாகியிருக்கின்றன. அந்த அளவுக்கு நம் நாட்டு ஸ்தல புராணம் பாடும் புலவர் சிகாமணிகளுக்கும், கிரேக்க நாட்டு பாவாணர்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது.



ஒரு கோவிலிலே கருடன் ஒன்று பொந்தமைத்து, குஞ்சு பொரித்து வாழ்ந்து கொண்டிருக்கும். ஸ்தல புராண ஆசிரியன் அந்தப் பக்கம் வரும்போது அந்தக் கருடன் தப்பித் தவறி தலைகாட்டியிருக்கும். அவ்வளவுதான்! உடனே அந்தப் பண்டிதமணி புளுகுமணியாகமாறி, கருடாழ்வார் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைச் சுமந்து செல்லும்போது ஓய்வு பெறுவதற்காக அந்த ஸ்தலத்துக்கு விஜயம் செய்ததாகவும், உடனே ஆழ்வாரின் கால்களிலே சிக்கியிருந்த பாம்பு பக்கத்திலிருந்த புற்றுக்குள் நுழைந்து, பின் களைப்பு நீங்கி திரும்பியதாகவும், மகாத்மியம் கூறி பாட்டமைத்து விடுவான்!



இதுபோன்ற புளுகுமணிகள் கண்ணைப் பறிக்கும் இரத்தினங்கள் பதித்த கற்பனை ஆடைகளை அணிந்துகொண்டு, கிரேக்க நாட்டு இலக்கியங்களைச் சமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கிரேக்க நாட்டு புராணத்திலே இந்த நாட்டு புராணத்திலே காணப்படாத மாபெரும் வேற்றுமையொன்று காணக் கிடைக்கிறது. அங்கே கடவுளர்கள் பூமியையும் வான மண்டலத்தையும் சிருஷ்டிக்கவில்லை. பூமி உருவான பின்னர்தான் தேவர்களும் பிறந்தார்கள்!

ஹீசியோட் என்னும் புலவன் உலகம் உற்பத்தியான கதையைச் சொல்கிறான்.

தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் விதை தூவப்படும் முன்னரே, விசாலமான அந்தப் பகுதியிலே ஜீவராசிகள் இல்லை! கும்மிருட்டும், குழப்பங்களும் நிறைந்திருந்தன! கடைசியாக இந்தச் சூன்யப் பிரதேசத்திலிருந்துஇரண்டு குழந்தைகள் பிறந்தன. ஒன்றின்பெயர் 'இரவு' மற்றொன்றின் பெயர் 'எரிபஸ்'! எரிபஸ் என்றாலே சாவின் அமைதி என்று பொருள்! பின்னர்தான் அந்த இருட்டிலே வெளிச்சம் உதயமானதாம்!.

வெளிச்சம் தோன்றிய பிறகு ஒருநாள் திடீரென்று பூமியும் பிறந்தது. பூமி பின்னர் தன்னளவுள்ளதாய், தன்னைவிட உயரமான இடத்தில் ஆகாயத்தை சிருஷ்டித்துக் கொண்டு, தன்னை மூடிக்கொண்டது. அதற்குப் பின்னர்தான் பூமாதேவிக்கும், வானத்துத் தகப்பனுக்கும் குழந்தைகள் பிறக்கின்றன!

என்ன காரணத்தாலோ கிரேக்க புராணீகர்கள், அந்தக் குழந்தைகளுக்கு மனித உரு கொடுக்கவில்லை மாமிச பர்வதம் போன்ற பூதங்களும், சக்கரம்போல் சுழலும் ஒற்றைக் கண் கொண்ட 'சைக்கிளாப்ஸ்' களும், புஜ வலிமையிலே யாரையும் மிஞ்சிவிடும் 'டிட்டான்'களும் ஒன்றன்பின் ஒன்றாய் உதயமாயின!

டார்வினும், மற்ற விஞ்ஞானிகளும் ஆண்டாண்டு காலமாய், ஆய்வுக் கூடத்திலே தங்களைத் தத்தம் செய்துகொண்டு, இரத்தம் சிந்தி கண்டுபிடித்த உண்மைகளை, கிரேக்க நாட்டுப்பாடகன் ஒரு கவிதையாலேயே அழித்து உலகத்தை உண்டாக்கி விட்டான்; அதிலே பூதங்களையும், ஒற்றைக் கண் படைத்த விசித்திரப் பிராணிகளையும் நடமாட விட்டுவிட்டான்.

பூமியிலே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கும்போது தான் வான மண்டலத்திலே தேவலோக தர்பார் துவங்குகிறது. தர்பாரின் துவக்கமே போராட்டம்தான்!

ஒலிம்பஸ் என்னும் தேவலோகத்துத் தலைமைப் பதவிக்காக சீயஸ் தன்னுடைய தந்தையான க்ரோனஸை எதிர்த்து பரமண்டலத்தின் முதல் யுத்தத்தைத் துவக்குகிறான். முன்பு நாம் குறிப்பிட்ட டிட்டான் என்னும் புஜபலமிக்க விசித்திரப் பிறவிகள் க்ரோனசுக்கு உற்ற துணையாய் இருந்து போர் புரிகின்றனர். சீயசோ தன்னந்தனியனாய்—தளராத உள்ளம் கொண்டவனாய் இருந்து யுத்த களத்தை உலா வருகிறான். இறுதியில் யுத்த காண்டத்தின் கடைசிப் பக்கம் எழுதப்படும் போது, புரோமித்தியஸ் என்னும் மாவீரன்—மனவலி கொண்டோன்-தக்கோரும் மிக்கோரும் இல்லாத தந்திரத்தின்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்



சீயசின் சூதறியாத சித்திரப்பாவை பேழையைத் திறந்தாள்......

விடுதலையாரே! விடுதலையாரே!! (தலையங்கம்)

Best copy available

......திரு. கைலாசம் கன்னட நாட்டுக்குக் கிடைத்த கலைவேந்தன். நல்ல கருத்துக்களை வலைபோட்டுப் பிடித்து அவைகளை நாட்டவரிடம் விரித்த வைர நெஞ்சன்! நாம் இன்று விரும்பும் திராவிட நாட்டை 'ஐக்கிய தெட்சணாம்' என்னும் பெயரில் அடைவதற்கு அன்றே அவர் கன்னட நாட்டிலே கர்ஜனை புரிந்திருக்கிறார். பெங்களூர் தோழர் ப. செல்வராசன் எழுதியிருக்கும் இந்தக் கட்டுரை, "தமிழகத்தைத் தாண்டி உங்கள் கொள்கை சென்றதுண்டோ?" என்றுசெப்பிடும் மந்த மதியினருக்கு, "அங்கும் அதற்கான சூழ்நிலைகள் உருவாகியுள்ளன" — என்னும் உயரிய பதிலைத் தருகிறது......,

# கலைவேந்தன் கைலாசம்!

சாப்பாடு — நினைப்பு வரும் போது; இருந்தால்!

காபி — யாராவது வாங்கித் தந்தால்.

பொழுதுபோக்கு — சினிமா, நாடகம், அல்லது அரட்டை.

ஒரு கிழிந்த சமுக்காளம்தான் படுக்கை; காற்றில்லாத கால் பந்துத் தோல்தான் தலையணை!

இந்த பட்டியலின்படி ஒரு மனிதர்— கலைஞன் — பிறர்க்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர்— முப்பதாண்டு காலம் வாழ்ந்தாரென்றால் அவரைப் பற்றி என்ன எண்ணுவது?

சிந்தனையாளர்களின் சரிதைகளை படிக்காதவர்கள் — உலக மேதைகளின் உண்மை வரலாறுகளை படித்து உணராதவர்கள் இந்த மனிதரையும் 'ஒரு பைத்தியக்காரன்' என்று சுலபமாக முடிவுகட்டி விடுவார்கள். ஆனால் அறிவுலகத்தின் சரித்திர ஏடுகளை, அக்கரையோடும் ஆவலோடும் படித்துவரும் முற்போக்கு வாதிகளின் உலகம் இவரை ஒரு 'சிந்தனையாளன்' என்றுதான் முடிவு கட்டும்.

•

தியாகராச பரமசிவ கைலாசம் கன்னட மக்களுக்குக் கிடைத்த சிந்தனைக் கருவூலம்! திராவிடத்தின் எதிர்கால ஏடுகளிலே, பொன்னெழுத்தால் பொறித்து—வைரத்தால் கோலெழுத்து பெருமை படுத்த வேண்டிய பேரறிவாளன்! விந்தையுள்ள மனிதர் மட்டுமல்ல; பரந்த சிந்தையுள்ளவர். முந்தையர் ஆண்ட தந்தையர் நாட்டை—தாயகத்தை — கர்நாடகத்தை—திராவிடத்தை தனி அரசு நாடாகக் காணத் துடிதுடித்தவர்.

கைலாசம் தனது எழுத்தால் எண்ணத்தை வெளிப்படுத்திய எழுத்தரசர். பேறு மன்னர் — கருத்துக் களஞ்சியம்—கன்னட நாட்டின் வ. ரா.! ஆமாம், கைலாசம் பிறப்பால் ஒரு பார்ப்பனர். ஆனால் வாழ்க்கையால், நடத்தையால், எண்ணத்தால், எழுதிக் குவித்த இலக்கியத்தால், அவர் ஒரு சீர்திருத்தவாதி—சிந்தனையாளன் —சிறப்புடை அறிஞர்.

"நான் சின்னஞ் சிறியவர்கள் சிந்தித்துக் கொண்டிருப்பதை விரும்புவதில்லை"—என்று தெருவில் என்னேரமும் சிந்தனையோடு நின்றுகொண்டிருந்த இளைஞன் கரிபால்டியைப் பார்த்து அப்போதைய ஜினேவா கவர்னர் இப்படிச் சொன்னானாம்.

இரவும் பகலும் எப்போதும் சிந்தனைக் குளத்திலேயே மூழ்கிக்கிடந்த நமதுகைலாசத்தைக் கண்டு பழமை உலகம் என்ன சொல்லியிருக்குமோ — தெரியவில்லை! கொண்டுதந்து வைக்கப்பட்ட காபி ஆறி சில்லிட்டுக் கிடக்கும். கையிலே எரியும் சிகரெட் புகைந்து சிறிதாகி கை விரல்களையே சுட்டுக்கொண்டிருக்கும். அப்போதும் சிந்தனை. அலம்பாத — தளும்பாத — அசையாத சிந்தனை! தீர்க்கமான சிந்தனை! எல்லோரையும் எந்நேரமும் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பார் ஆனால் அவர் மட்டும் சிரிக்க மாட்டார். சிந்தனைக் கீறல்கள் அவர் முகத்தில் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும்.

ஒரு சமயம் குழந்தையுள்ளத்தோடு எல்லோரிடமும் கொஞ்சுவார்; ஆடுவார்; இரக்கம் காட்டுவார். பிறிதொரு சமயம் கோபம்-கடுகடுப்பு—அகங்காரப் பேச்சு இவைகளோடு காணப்படுவார்.

ஒரு சமயம் தன்னிடமிருக்கும் பணம்-உடை—சாமான்கள் எல்லாவற்றையும் தூக்கித் தூக்கிக் கண்டவர்களுக்கெல்லாம் கொடுத்துவிடுவார். மற்றொரு சமயம் சிகரெட்டுக்குக்கூட காசில்லாமல் எல்லோரிடமும் கேட்டுக்கொண்டு கையேந்தி நிற்பார்.

எழுத்தாளர்களின் வாழ்க்கையே இப்படித்தானே? இன்பத்திலும் துன்பத்திலும், வளமையிலும் வறுமையிலும் மாறி மாறி விழுந்துகொண்டிருப்பது தானே, அவர்களின் நீங்காத இயல்பு? கைலாசத்தின் வாழ்க்கை இந்த வினாவைத்தான் நம் கண்முன் எழுப்புகிறது.

கைலாசம் நாட்டுக்குப் படைத்த கருத்துக் களஞ்சியங்கள் எண்ணற்றவை. விரிவாக சொல்லப் புகுந்தால், கன்னட-ஆங்கில நாடகத் துறை கைலாசத்தின கைவன்மையால் — பேனா முனையால் முழு வளர்ச்சி பெற்று வளர்ந்தது. இன்னபிற ஆசிரியர்களைப் போல கைலாசம் ஷேக்ஸ்பியரையும், ஷெல்லியையும், பைரனையும், கீட்ஸையும் தனது துணைக்கு அழைத்துக் கொள்ளவில்லை. சுயமாகச் சிந்தித்தான், மக்களின் அன்றாட வாழ்க்கைக் களத்தின் மத்தியிலே நடைபோட்டபடி!

விம்முகின்ற குரல்-வீதி சுற்றும் நாய்-வீட்டுக்குள் அடைபட்டு வேதனையின் விளிம்பிலே நிற்கும் பெண்மை-வெறியாட்டம் போடும் ஆண்மை-இத்தனைக்கும் ஆதாரமாக மக்களிடையே ஊறிக் கிடக்கும் புராண போதை — பழமைப் பித்து-இந்த தொல்லைகளால் ஊர்ந்து செல்லும் சமூக வளர்ச்சியின் நத்தை வேகம்-இத்தனையையும் தனது அறிவும் ஆவேசமும் கலந்த எழுத்துக்களின் மூலம நாட்டுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியவர் கைலாசம்.

சென்னை பிரசிடென்ஸி கல்லூரியில் பி. ஏ.வை முடித்துக் கொண்டு கைலாசம் மேல் படிப்புக்காக லண்டன் சென்றார். அங்கே, "லண்டன் ராயல் காலேஜ் ஆஃப் சயின்ஸ்" என்னும் கல்லூரியில் சேர்ந்தார். படிப்பை நாடிச்சென்றவரை, அங்கே நடிப்புக் கலை தான் வரவேற்றது. லண்டனில் தாங்கியிருந்த ஆறாண்டு காலத்திலும் கைலாசம் அங்கே நடைபெற்ற ஒவ்வொரு நாடகத்தையும் பார்க்கத் தவறியதே கிடையாது. ஓரிரு நாடகங்களை திரும்பத் திரும்ப நூறு தடவைக்கு மேலாக பார்த்ததுமுண்டு.

இப்படி எந்நேரமும் நாடகசாலைக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கவேண்டுமென்றால் அதிகமாக பணம் வேண்டுமல்லவா? இதற்காக கைலாசம் பட்டபாடு—கையாண்ட முறைகள் வேடிக்கையானது மட்டுமல்ல; விந்தையானதுங்கூட!

லண்டனின் கடுமையான குளிரையும் தாங்கிக்கொண்டு, தன்னிடமிருந்த உயர்ந்த உடுப்புக்களையெல்லாம் விற்றார். தினமும் ஒரே வேளை சாப்பிட்டு வந்தார்—சில நாட்களில் அதையும் தவிர்த்து, ஓரிரு 'கப் டீ'யோடு பசியாறினார். இந்த சிக்கன வாழ்க்கைமூலம் பணத்தை மிச்சம் பிடித்து நாடகம் பார்த்தார். கையில் பணமே இல்லாத போது, கைலாசம் ஹாஸ்டலில் ஒரு வேடிக்கையை செய்து பணம் சம்பாதித்து விடுவார்! என்ன தெரியுமா அந்த வேடிக்கை? சிகரெட் புகையினால் 'டி.பி. கைலாசம்' என்று ஆங்கிலத்தில் எழுத்துக்களை நெளிநெளியாக உண்டாக்கிக் காட்டுவார்.

இந்த ஆச்சரியமான வேடிக்கையை பார்க்கும் ஆங்கில மாணவர்களும் மற்றவர்களும் பணத்தை வாரிக் கொட்டுவார்கள் கைலாசத்தின் 'ஜேபி'யில். அவ்வளவுதான்; அவர்களுக்கெல்லாம் ஒரு 'குட் பை' அடித்துவிட்டு ஓட்டமாக நாடக தியேட்டருக்கு ஓடி, கம்பீரமாக முதல் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொண்டு முன் வரிசையில் உட்கார்ந்தபடி நாடகத்தை துளியும் விடாது ரசிப்பார்.

இப்படிஎல்லாம் கலை 'வெறி' பிடித்தலைந்த கைலாசத்தை உத்தியோகத்தில் இருத்தினால் ஆகுமா? நாடு திரும்பிய கைலாசம் தேடிவந்த பதவிகளையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு, கலைத்தொண்டு செய்ய முனைந்தார். அந்தத் தொண்டின் மூலம்தான் — அவர் காட்டிய மொழிப்பற்றின் மூலம்தான்— 'கைலாசம்' என்ற பெயர் எல்லோருக்கும் தெரிந்தது; சிலருக்கு அது குரோதத்தையும் தந்தது.

மொழி வளர்ப்பதற்கென்றே இருக்கும் "கன்னட சாகித்ய பரிஷத்"தில் கைலாசத்தைக்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

பாராசாரி பீதமர்ந்து பாரெங்கும் பவனி வருகிறான்!

**செஞ்சியின் செல்வன்**

'அமல்'னது சீரிய சிந்தனைப் புரவியும் புடை சூழ!

(தேசிங்குராஜன் சரிதை, நாடக உருவில்,
செஞ்சி வரலாறு கோட்டை வர்ணனையுடன்)

**வண்ண முகப்பு! அழகிய பதிப்பு! விலை ரூ. 2-4-0**

**இலக்கியப் பூங்கா**

17, கஸ்தூரிபாய் வீதி, பண்ருட்டி, (தெ. ஆ. மாவட்டம்)

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 15—4—55 வெள்ளி

## விடுதலையாரே! விடுதலையாரே!!

கலஞகிக் கிடக்கும் காங்கிரஸ் மண்டபத்திலே வௌவாலடையும் காட்சிகள் சர்வ சாதாரணமாக ஆகிக் கொண்டிருக்கின்றன. ஆச்சாரியார் காலத்துக் காங்கிரஸ் அவரது சர்வாதிகார வெறித் தாண்டவத்தால் கலகலத்துப்போனது. இன்றே ராஜதந்திரி என்று தனக்குத் தானே நினைத்துக் கொண்டிருக்கும் காமராஜர் காலத்துக் காங்கிரஸ், மண் குதிரைகளை நம்பி ஆற்றைக் கடந்து படை நடத்தும் 'ஆஷாடபூதித் தன்மை' பெற்றதாயிருக்கிறது. முன்பே ஒரு முறை 'முரசொலி' எச்சரித்திருக்கிறது; "காமராசரே! காங்கிரசிலே வௌவாலடைகிறது; ஜாக்கிரதை", என்று! அவரோ கட்சியிலே தோகை பெருக்கும் காரியத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

தெருவிலே வீசி எறியப்பட்ட எச்சில் இலைகளை பத்திரமாகப் பொறுக்கி எடுத்து, கழுவி, வெய்யிலிலே உலர்த்தி, கடையிலே கொண்டுவந்து வியாபாரம் செய்பவன் முதல்தரமான மோசடிக்காரனாக இருக்க வேண்டும். அதை அரசியலிலே ஒரு முக்கியமானவரே செய்கிறார் என்கிறபோது அந்தத் தமிழரோடு நாமும் சேர்ந்து பிறந்தோமே என்ற அவல நிலையை எண்ணி, எண்ணி ஏங்குகிறோம்; மனம் வீங்குகிறோம்!

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நேரத்திலே நடையைக் கட்டிய 'சிலதுகளை'யும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் விரட்டப்பட்ட 'சிலதுகளை'யும், தூக்கி வைத்துக்கொண்டு '**இமயம்**' நொறுங்க '**பேரிகை**' முழங்கும் நிலையை நாடு காணுகிறது; நகைப்பு கொட்டுகிறது, நாடாளும் கட்சியின் 'நடுத்தெரு போக்கு' கண்டு!

காங்கிரசிலே சேர்ந்திடுவோருக்கு கைலாகு கொடுத்திடும் காமராசரும் 'பதவி வேட்டைக்காக வராதீர்கள்!'—என்ற பல்லவியோடுதான் —சரணம் பாடி வரும் அந்த சற்புத்திரர்களுக்கு 'அபயம்' அளித்து வருகிறார் என்றாலும், பதவி வேட்டைக்காக அல்லாமல் வேறு எதற்குப் போயிருக்கிறார்கள், இந்தப் புதுரக தேசபக்தர்கள் என்று கேட்கிறோம்.

காங்கிரஸ் என்ன இப்போதுதான் விடுதலைப் போராட்டத்திலே இறங்கி யிருக்கிறதா! அதிலே சேர்ந்து முரசு கொட்ட இந்த வீரர்கள் ஓடியிருக்கிறார்களா? 'தியாகத் தீயிலே குதிக்க தேச பக்தர்கள் தேவை —என்று 'விருதுநகரார்' விருத்தம் பாடினாரா? அந்தத் தேவை போக்க இந்த தீராதி தீரர்கள் ஓடினார்களா? அல்ல; அல்ல! படையிலே சேர அல்ல; காங்கிரஸ் கடையிலே கிடைத்தவரை கொள்ளையடிக்க! நடையிலே புது முறுக்கு காட்டி, நயவஞ்சகர் பட்டாளம்—நன்றி மறந்தோர் கூட்டம்—நரகல் நடையழகோடும், நடுங்கா நாக்கழகோடும் வரிந்து கட்டிப் புறப்பட்டிருக்கிறது.

அந்தோ, பரிதாபம்! தூக்கி யெறியப்பட்ட எச்சில் இலைகளை தூய்மைப்படுத்தி ஒருவன் வியாபாரம் செய்கிறான். இங்கே விரட்டப்பட்ட விபீஷணர்களை வாரியணைத்து விருதுநகர் சீமான் 'விளம்பர விளக்கு' ஏற்றுகிறார். ஏளனப் புன்னகையோடு இந்த ஏலாதார் செயலைப் பார்த்துக் கொண்டிருக்கும் நமது கவனத்தை வேறு பக்கத்துக்குத் திருப்புகிறார், விடுதலையார், "**காங்கிரஸ் கட்சியில் சேர்தல்**" என்ற தலையங்கத்தின் மூலம்!

வழக்கமான செய்திதான் இது என்றாலும் நாம் விளக்கந்தர வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். சமயம் வரும்போது என்று மாத்திரமல்ல; நெஞ்சில் அரிப்பெடுக்கும் போதெல்லாம் நஞ்சிலே பேனாவைத் தோய்த்தெழுதும் பண்பு கொண்டவர், விடுதலையார்! அந்தத் தொடர்ச்சி கெடாமல்தான் பெரியாருக்கு கார் நிதி சேர்க்க வேண்டிய இந்த முக்கியமான நேரத்திலேகூட, நம்மீது மோதிக் கொள்வதற்கு முற்படுகிறார். நமது பழைய நண்பர்தான் என்றாலும் இன்றைய "புதிய பாகிஸ்தானின்" கொள்கையை எழுத்துத் தவறாமல் கடைபிடிக்கும் பண்பு பெற்றிருக்கிறார். உள் நாட்டிலே குழப்பம் என்றால்—தன் ஆட்சிக்கு செல்வாக்கு தேடிக்கொள்ள பாகிஸ்தான் அரசாங்கம் இந்தியாமீது பாயும்—காஷ்மீர் களத்தைக் காட்டும்! உள் நாட்டு மக்களின் கண்களெல்லாம் தங்கள் அரசாங்கத்தின் குறைகளைக் கவனிப்பதற்குப் பதிலாக, இந்தியா—பாகிஸ்தான் [illegible]

...பும் நிலையிலுள்ளவர்களையும், தம்மையறியாமலேயே '**முகமதலி** வாழ்க!'—என்று ஒலி கிளப்பும் நிலைமைக்கு ஆளாக்கும். அந்த ராஜதந்திரத்தை 'விடுதலை'யார் சில நாட்களாகக் கையாண்டு வருகிறார்!

குடியேற்றத்திலே காமராஜருக்கு பகிரங்கமாக ஆதரவுக் கொடி ஏற்றலாமா? பெரியாரே தேர்தல் பிரச்சாரகராக அங்கு செல்லலாமா? உப தேர்தல்களிலே பச்சையாகவே காங்கிரஸ்காரர்களை ஆதரிக்கும்படி அறிக்கை விடலாமா? துறையூர் பஞ்சாயத்து போர்டிலே பெரியார் படத்தை காமராஜர் திறந்துவைக்க மறுத்துவிட்டபோது பட்டுக்கோட்டையிலே காமராஜர் படத்தை பெரியார் திறந்துவைக்கலாமா? 'சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரசென்னும் பாம்பையடிக்க கையிலகப்பட்ட தடியை தூக்க வேண்டியதுதான்; அப்படி அகப்பட்ட தடிதான் கம்யூனிஸ்ட் தடி'—என்று மன்னார்குடி பொதுக் கூட்டத்திலே பேசிய பெரியார், இந்த உப தேர்தல்களிலே கம்யூனிஸ்டை ஒழிக்க காங்கிரசை பகிரங்கமாக ஆதரிக்கலாமா? பொது மக்கள் பணம் லட்சக் கணக்கில் இருக்கும்போது புதிய கார் வாங்க பொது மக்களிடம் 'புதிய வரி' வசூலிக்கலாமா?

—இதுபோன்ற கேள்விகள் திராவிடர் கழகத்தின் கோட்டைக்குள்ளே கிளம்பியதும், அந்த வினவெழுப்பிய வீரர்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக விடுதலையார் பாகிஸ்தான் பாதையிலே நடக்கிறார். தி. மு. கழகத்தைத் தாக்குவதின் மூலம் கோட்டைக்குள் ஏற்பட்ட புகைச்சலை மறைக்க முனைகிறார். சென்ற தி. மு. க. மாநில மாநாட்டுக்காக சேர்க்கப்பட்ட நிதி முப்பதாயிரத்தையும் பெட்டியிலே பூட்டாமல்—வட்டிக்கு விடாமல்—கழகத்தின் மாளிகையை எழுப்பியிருக்கும் நம்மைப் பார்த்து—நாம் இந்த மாநில மாநாட்டிற்கு நிதி திரட்ட பேரூரிலே தீர்மானித்ததை கிண்டல் செய்கிறார். அவரது வசை புராணத்தின் ஒரு படலம்தான் வெளியூர் 12-ந் தேதி 'விடுதலை'யிலே தலையங்கமாக உருவெடுத்திருக்கிறது.

காங்கிரசில் சேருவோரைப் பற்றியது அந்தத் தலையங்கம். ஆனால் அப்படிச் சேருவோரைக் காரசாரமாகக் கண்டிக்க வேண்டிய அவரது பேனாமுனை—யாரோ நாலு வருடத்துக்கு முன்பே தி. மு. கழகத்திலிருந்து விரட்டப்பட்ட ஒருவரை—தற்போதைய தி. மு. க. என்று தப்பாகக் கூறிடுவதோடு நில்லாமல்—தி. மு. கழகத்தை **சதிக் கூட்டத்தார்** என்றும் வர்ணித்திருக்கிறது. பெரியாரிடமிருந்து நாம் பிரிந்தபோது. பெரியார் அவர்களே நம்மை **சதிக் கூட்டத்தார்** என்று கூறி, அதன் காரணமாய் நம்மீது ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்துக்கொள்ள நாம் வழக்கு மன்றம் சென்றபோது, **நான் இவர்களை சதிகாரர்கள் என்று கூறவில்லை**—என்று பெரியார் அவர்கள் நீதிமன்றத்தின் மூலம் கூறியதை நாமும், நாடும் மறந்துவிடவில்லை. விடுதலையார் ஏனோ மறந்தார்!

பதவி மோகம் பிடித்து திராவிடர் கழகத்திலிருந்து விலகினோம் என்பது விடுதலையாரின் மற்றொரு குற்றச்சாட்டு. ஆனால் அவரே அந்தத் தலையங்கத்தின் வேறொரு இடத்தில் குறிப்பிடுகிறார்: 'பதவி மோகம் பிடித்த நீதிக் கட்சியிலே பெரியார் சேர்ந்தார்'—என்று! விடுதலையின் வாசகத்தை அப்படியே தருகிறோம்:

> "உத்தியோகத் துறையிலும் கல்வித் துறையிலும் திராவிட மக்களுக்கு இதன் மூலம் ஏதாவது நன்மை தேடிக் கொள்ளலாம் என்ற ஒரே எண்ணத்துடன் பெரியார் அவர்கள் தமது அக்காலத் தோழர்களின் (இதை எழுதுகிறவரும் ஒருவர்) விருப்பத்துக்கு மாறாக, **வலுவில் புகுந்து** நீதிக் கட்சியை ஆதரித்தார்."

விடுதலையின் திரை மறைவு ஆசிரியரே மறுத்தும், பெரியார் அவர்கள் நீதிக்கட்சியை 'வலுவில் புகுந்து' ஆதரித்திருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? பெரியார் இன்று மட்டும் காங்கிரசை **வலுவில் புகுந்து** ஆதரிக்கவில்லை; வழக்கமாகவே எந்தக் கட்சியையும் நிபந்தனையில்லாமல் **வலுவில் புகுந்து** ஆதரிக்கும் வழக்கம் அவரிடம் இருந்திருக்கிறது என்பதைத்தானே விடுதலையார் சொல்லாமற் சொல்லுகிறார்!

நிபந்தனையின்றி நீதிக்கட்சியை **வலுவில் புகுந்து** ஆதரித்தார்!
தேர்தலில் கம்யூனிஸ்டுகளை **வலுவில் புகுந்து** ஆதரித்தார்!
இன்று காங்கிரசையும் **வலுவில் புகுந்து** ஆதரிக்கிறார்!

—விடுதலையார் எவ்வளவு தந்திரமாக பெரியாரைக் குற்றம் சாட்டுகிறார் என்று நாம் எண்ணுவதா? அல்லது ஆத்திரத்தில் 'அவசர சாமியார்' வார்த்தைகளை அள்ளித் தெளிக்கிறார்—என்று கருதுவதா? அவர்தான் பதில் கூறவேண்டும்.

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

பூரிப்பான செய்தி!
மே முதல் வாரத்திலிருந்து
"புதையல்"
வருகிறது!

## (தலையங்கம் தொடர்ச்சி)

"இவர்களுக்கு பதவி வேட்டை தவிர வேறு லட்சியமே கிடையாது. நாங்கள் சிறைசென்று திரும்பும்போது எம். எல். ஏக்களாகவும், மந்திரிகளாகவும் திரும்புவோம்—என்று இதன் பொதுச் செயலாளரே கூறியிருக்கிறார்"—இதுவும் 'விடுதலை'யின் வாசகம்தான்!

"ஒரு காலத்தில் என் பெட்டி படுக்கை தூக்கியவர்களெல்லாம் மந்திரிகளாகி விட்டார்கள்! நான் விரும்பினால் எனக்கும் ஒரு மந்திரி வேலை கிடைக்கும்!"

—என்று பெரியார் பல கூட்டங்களில் பேசியதை மறந்துவிட்டு, நம்மைக் குற்றம் சாட்டுகிறார், விடுதலையார்! நமது நாட்டு அரசுகட்டிலில் நாம் வீற்றிருக்க வேண்டுமென்று விரும்புவது 'பதவி வேட்டை'யாம்! பதவி வேட்டையாடிய கட்சிகளுக்கெல்லாம் பக்கத்துணை நின்று பிரச்சார பீரங்கிகளாக முழங்கி, **வலுவில் புகுந்து** ஆதரவு தரலாமாம்; ஆனால் திராவிடத் தரணியை நாம் ஆளவேண்டுமென்று கூறும் தி. மு. கழகத்தை ஆதரிக்கக்கூடாதாம்! அதற்கு மாறாக அதைப் 'பதவி வேட்டைக் கழக'மென்று அர்ச்சிக்க வேண்டுமாம்! அந்தோ! மிகமிக இரங்கத்தக்க நிலை!

"திரு காமராசர் அவர்களை பெரியார் ஆதரிக்கிறாரே, என்?—என்று சிலர் கேட்கிறார்கள். டாக்டர் சுப்பராயன், பொப்பிலி அரசர், ஓமாந்தூர் ரெட்டியார், ஆச்சாரியார்—போன்ற எத்தனையோ முதல் அமைச்சர்களை பெரியார் எதற்காக ஆதரித்தாரோ அதே காரணம்தான்!"

——இதுபோல விளக்கம் தருகிறது, விடுதலை! ஆதரிப்பதற்கும், பாராட்டுவதற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறதென்று நாம் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறோம். நாமும் காமராசரைப் பாராட்டியிருக்கிறோம் — புதுக் 'கல்வித் திட்டம் ஒழிந்ததற்காக! ஆனால் ஆச்சாரியாரையும், ஓமாந்தூராரையும் ஆதரித்தது போலத்தான காமராசரைப் பெரியார் ஆதரிக்கிறார் என்று விடுதலையார் கூறுகிறாரே; அங்குதான் பலமான சந்தேகம் எழுகிறது, நமக்கு!

ஆச்சாரியாருக்கும், ஓமாந்தூராருக்கும் பெரியார் ஓட்டு கேட்டதில்லை; தேர்தல் பிரச்சாரம் செய்ததுமில்லை; உப தேர்தல்களில் அறிக்கைகள்விட்டு உதவியதுமில்லை; திராவிட கழகத் தோழரை தேர்தலுக்காக காங்கிரஸ் அபேட்சகராக மாற்றி 'படுக்கோட்டை' செய்ததுமில்லை.

—இதை 'விடுதலை'யார் ஏனோ மறந்து விட்டார்!

இப்படிப் பழைய விஷயங்களை மறந்துவிட்டு முன்னுக்குப்பின் முரணாக, தலையங்கம் தீட்டுவது விடுதலையின் திரை மறைவு ஆசிரியருக்கு புதிதல்ல! சென்றஆண்டு விடுதலையில் ஒரு விபரீதத் தலையங்கம் தீட்டினார். மறுநாளே பெரியார் அவர்கள் அந்தத் தலையங்கத்தை மறந்து, அதே 'விடுதலை'யில் ஒரு அறிக்கை விட்டிருந்தார். அந்த அவமான நிகழ்ச்சிக்குப் பிறகும் 'ஷேணாய் நகர்வாசி' இதுபோன்ற முரண்பட்ட எழுத்துக்களை கொம்புகளாக்கிக் கொண்டு நம்மை முட்டவரும் நிகழ்ச்சி மிக மிக பரிதாபத்திற்குரியது! அறிந்தோ, அறியாமலோ அவர் திராவிடர் கழகத்திற்கு தீங்குவிளைவித்துக் கொண்டிருக்கிறார். தேமாங்கனி போன்ற கருத்துகள் வெளிவந்த 'விடுதலை'யில் இன்று தேளின் விஷம் போன்ற எழுத்துக்களைக் கோர்க்கிறார்.

திராவிடர் கழகத்திலே அனைவருமே விடுதலையார் பாதையிலே நடப்போரல்ல! அங்கும் அறிவுலகத் தூதுவர்கள் இருக்கிறார்கள்! மாசற்ற மாணவமணிகள இருக்கிறார்கள்! செயல் புரியும் சிங்கங்கள் இருக்கிறார்கள்! பழைய பாசத்தோடும், உயர் நேசத்தோடும் அவர்களை கேட்கிறோம்; விடுதலையார் கூறுவதுபோல தி. மு. கழகத்தார் பதவி வேட்டைக்காரர்கள்தானா? சதிகாரர்கள்தானா? 'போலித் திராவிடர் கழகம்' உண்டாக்கியவர்கள்தானா? பதில் சொல்லுங்கள்! பழகிய தோழர்களே! பதில் சொல்லுங்கள்! இதோ சகிக்க முடியாத மற்றொரு குற்றச்சாட்டு! அதற்கும் நீங்களே பதில் சொல்லுங்கள்!

"ஜாதி ஒழிப்பு, மத ஒழிப்பு, ஆரியனை வெளியேற்றல், மூடநம்பிக்கை ஒழிப்பு, பொருளாதாரத் துறையில் பொதுவுடமை, வடநாட்டு ஆதிக்க ஒழிப்பு, தனித் திராவிடநாடு,—ஆகிய திராவிடர் கழக லட்சியங்களை, கண்ணீர்த்துளிக் கட்சி உட்பட வேறு எந்தக் கட்சியாவது ஒப்புக் கொள்கிறதா? இரண்டொன்றை ஒப்புக் கொள்வதாக நடித்தாலும், நடைமுறையில் எதையாவது செய்து காட்ட முடிகிறதா?"

—விடுதலையார் கேட்கிறார், தோழர்களே, இப்படி! வேதனையான கேள்வி! திராவிடத்தின் விடுதலை விரும்பிகளே, பதில் சொல்லுங்கள்!

நாங்கள் என்ன கலப்பு மணத்தை எதிர்த்தோமா? கைலாசபதியின் சைவ மதத்தைச் சார்ந்தோமா? **ஆரியம்** ஒழிந்தால் போது மென்று சொன்ன நேரத்திலும், பூணூல் அணிந்த புரோகிதர் தலைவர் ஆச்சாரியாரை ஆதரித்தோமா? காளிகோவில் கட்டிய மாவூரார் மாளிகையில் அடியெடுத்து வைத்தோமா? கார்ல் மார்க்சின் தத்துவம் கசக்கிறது என்றோமா? கல்லக்குடியிலே வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து சிந்திய இரத்தமெல்லாம் நடிப்பு மேடையிலே கரைத்து விடப்பட்ட சிகப்பு வர்ணமென்று சிந்தாதிரிப்பேட்டை பாஷையிலே நீங்களும் பேசுகிறீர்களா? 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற எங்கள் முழக்கத்திலே என்றைக்குத் தோழர்களே மூளி ஏற்பட்டிருக்கிறது? கம்யூனிசம் வந்தால் திராவிடநாடு வேண்டாமென்று சொன்ன பெரியாரின் வாதத்தையே எதிர்த்த பிள்ளைகளாயிற்றே நாங்கள்! நாங்களா 'திராவிடர் கழக' இலட்சியங்களை எதிர்க்கிறோம்?

அருமைத் தோழர்களே! தவறான பாதையில் உங்களை அழைத்துச் செல்லும் விடுதலையாரைக் கேளுங்கள்!

"விடுதலையாரே! விடுதலையாரே! தி. மு. கழகம் இலட்சியமற்றது என்று கூறுவது தவறல்லவா? நடைமுறையில் அவர்கள் எதுவும் செய்து காட்டவில்லை என்று கூறுகிறீர்களே, ஆரியனை வெளியேற்றும் நமது கொள்கையை, நாம், நமது நடைமுறையில் செய்து காட்டியிருக்கிறோமா? எத்தனை ஆரியர்கள் மத்திய ஆசியாவுக்கு ஓடியிருக்கிறார்கள், உங்கள் நடைமுறைத் திட்டத்தின்படி?—என்று மாற்றுக் கட்சியினர் கேட்டால் நாம் பதில் சொல்லவேண்டாமா? ஆகவே அளந்து எழுதுங்கள் விடுதலையாரே!"

—என்பது போல நீங்கள் விடுதலையாரைக் கேட்க ஆரம்பித்தால் அவர் தமது வசை புராண வழியிலிருந்து திரும்பி, வகையான வழியில் நடப்பார்! திராவிடர் கழகத்திலிருக்கும் உண்மைத் தோழர்களே! சிரமம் பாராது நமது சிபார்சை ஏற்று சிந்தாதிரிப்பேட்டை பக்கம் விழியைத் திருப்புங்கள்! விடுதலையார் தமது வழியைத் திருப்பட்டும்!

---

**கிரேக்க......**

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

சிகரம், சீயசோடு சேர்ந்து கொள்கிறான். போர் உச்ச கட்டத்தை அடைகிறது. அக்குரோனிக் கணக்கில் அணிவகுத்து நிற்கும் க்ரோனசின் சைனியத்தின்மீது, சீயஸ், மின்னலைப் பிடித்து அவைகளை எதிரிப் படைகளின் கண்கள் கிழியும்படி மின்னச் செய்கிறான். இடிகளை இழுத்துவந்து, காதுகள் செவிடாகும் அந்த ஒலிக் கூட்டத்தை அவர்களின்மீது ஏவிவிடுகிறான்! சீயசின் படைக் கருவிகளின் பட்டியல் இவ்வளவோடு நின்றுவிடவில்லை! மாபெரும் பூகம்பங்களை உண்டாக்குகிறான்; மண்ணினமே மறைந்து போகும் மகத்தான பிரளயங்களை சிருஷ்டிக்கிறான்!

க்ரோனசின் படைகளால் மின்னல் கொடிகளையும், இடிக் கீற்றுகளையும் தாங்கி நின்று போராட முடியவில்லை; தீயிலிட்ட சருகாக பொசுங்கிப் போயினர், அந்தப் போர் வீரர்கள். போர் நடக்கும்போது அகிலமெல்லாம் ஆட்டங் கொடுத்ததாம்; ஒலிம்பஸ் மலைத் தொடர் பாதாள லோகத்திலே விழுந்துவிடுமோவென்று கடவுளர் யாவரும் கண்ணை மூடிக்கொண்டனராம்! நம் நாட்டு மகாபாரதப் போரை நினைவு படுத்தும் இந்த யுத்தம்தான் கிரேக்க புராணத்து முதல் அத்தியாயமாக விளங்குகிறது!

போர்க்களத்திலே ஜெயபேரிகை தட்டிய சீயஸ், தான் கைது செய்த பகைவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனைகள் வழங்கினான். அக்கினிக் குண்டங்களிலே அவர்களைத் தள்ளி பழி வாங்கிக் கொண்டான். உளவுகள் புரிந்த அட்லாஸ் என்னும் மலைத் தோளனைப் பிடித்துவந்து அவன் முதுகிலே பூமியைத் தூக்கி நிறுத்தினான். இரவு பகலென்று பாராமல்—இமைகளை மூடாமல்—அவன் பூபாரத்தைச் சுமக்க வேண்டுமென்றும், இரக்கம் சிறிதுமின்றி ஆணையிட்டான்! பலரை பாதாள லோகத்திலே சிறை வைத்தான்; சித்திரவதை செய்தான்! இந்தக் கொடுமையான நடவடிக்கை கண்டு கடவுளர்களே கண்ணீர் விட்டனராம்!

போரினால் வானமண்டலத்துக்குக் கீழேயுள்ள விசித்திரப் பிறவிகள் யாவும் பூண்டோடு அழிந்துவிட்டன. மனித இனம் தோன்றுவதற்கு பூமி பக்குவமடைந்து விட்டது! போர்க் காலத்திலே சீயசுக்குப் பேருதவி செய்த புரோமித்தியஸ், எப்பிமித்தியஸ் என்னும் இரு சகோதரர்களுக்கு சீயஸ் படைப்புத் தொழிலை ஒப்புவித்தான். அந்த இருவரும்தான் கிரேக்க புராணத்து பிரம்மாக்கள்!

புரோமித்தியஸ் என்ற வார்த்தைக்கு 'வருமுன் காப்போன்' என்று பொருள்; எப்பிமித்தியஸ் என்பது 'வந்தபின் காப்போன்' என்னும் வாசகத்தைக் குறிக்கும். பெயருக்கேற்றபடியே அவன் சபல புத்திக்காரன்; வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கும் வெகுளி!

எப்பிமித்தியஸ் ஆக்கும் தொழில் செய்யும் ஆசனத்தில் அமர்ந்து, உயிர்களுக்கு ஜீவசக்தியை ஏற்றிக்கொண்டிருந்தபோது, முன்யோசனை சிறிதுமில்லாமல் நல்ல பண்புகள் அனைத்தையும் அவன் மிருகங்களுக்கு வாரி வழங்கிவிட்டான். மயிலைப் படைத்து அதற்கு வானவில்லின் வர்ண ஜாலங்களைத் தந்தான். மந்தியை உண்டாக்கி அதற்கு மனித சேஷ்டைகளைக் கொடுத்தான். புலிக்குப் போரிடும் தன்மையையும், கிளிக்கு கொஞ்சு மொழியையும் கொடுத்தான். நரிக்குத் தந்திரம்—பரிக்கு பகைவரைக் கண்டதும் ஓடி ஒளிந்து கொள்ளும் வன்மை—இப்படி ஒவ்வொரு மிருகத்துக்கும், அவைகள் தான் பின்னால் சிருஷ்டிக்கப் போகும் மனிதனுக்குத் தேவைப்படுமே என்னும் யோசனையேயில்லாமல், நல்ல பண்புகள் வற்றிப்போகும் அளவுக்கு தானம் செய்துவிட்டான்.

இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்த பின்னர்தான் மனித இனத்தை எப்படிப் படைப்பது? எந்த குணங்களோடு படைப்பது?—என்கிற கேள்வி எப்பிமித்தியசின் மனதைக் குடைந்தது. முன் யோசனைகள் கூறுவதற்குத்தான் அண்ணன் புரோமித்தியஸ் எப்போதும் தயாராகவே இருக்கிறானே! எப்பிமித்தியஸ் அவன் கையிலே 'பிரம்மா வேலை' யைக் கொடுத்துவிட்டு நகர்ந்துவிட்டான்.

புரோமித்தியஸ் மனிதர்களை மிருகங்களைப் போல் அல்லாது கடவுளர்களைப் போல நேராக நிமிர்ந்து நடக்கச் செய்தான். நெஞ்சு உறுதியையும், நாவன்மையையும் அளித்தான். ஆனாலும் எப்பிமித்தியசின் புத்தி குறைவினால் வல்லமை பெற்று உலவும் மிருகங்களிடையே இந்த மனிதக் கூட்டம் எப்படி வாழ்வது?

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்




## இந்தியச் சார்லி:

இந்தியப் பிரஜை எப்படி இருக்கிறார்கள் என்று ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை 'சாம்பிள்' அனுப்பச் சொன்னால், உடனே 'அவரை' பார்சல் செய்து விடலாம்—

எலும்புக் கூட்டுக்கு கதர்க் குல்லாய் அணிவித்ததுபோன்ற திரேக அமைப்பு—

உதட்டுக்கு மேலே இரண்டு ஈக்கள் ஒட்டிக்கொண்டிருப்பது போன்ற அரை மீசை—

— அவர்தான் தேபர்-காங்கிரஸ் கட்சியின் ராஷ்டிரபதி! அவரைத்தான் அண்ணா அவர்கள் சார்லி சாப்ளின் என்று குறிப்பிட்டார்!

அண்ணாவின் இந்த உவமையை ஒரு மாதத்துக்கு முன்னர் பத்திரிகையில் படித்ததும் நான் பதறிப்போய்விட்டேன். பிறவிக் கவிஞனையும் புறமுதுகிடச் செய்யும் அளவுக்கு பொருத்தமான உவமைகளைப் புனைந்து காட்டியவர், தேபர் விஷயத்திலே தவறிவிட்டாரே என்று சஞ்சலப் பட்டேன. அது தவறு என்பதை நான் இப்போதுதான் புரிந்துகொண்டேன்!

சார்லி சாப்ளின் ஜெகத்தையே களிப்பில் ஆழ்த்துபவன்! வேதனை வடிவங்களுக்கு சிரிப்புக் கற்றுக்கொடுக்கும் செல்வம்! ஆனாலும் நம்முடைய அரசியல் சாப்ளின் 'காமிக்' செய்வதிலே அந்தக் கலைத்துறை சாப்ளினை மிஞ்சிவிட்டார்!

இனிமேல் தனிப்பட்ட யாரும் மாதம் இருநூற்றிஐம்பதுரூபாய்க்குமேல் செலவு செய்யக் கூடாதாம்! அப்படிச் செய்வது ஒரு மாபெரும் சமுதாயக் குற்றமாம்! பம்பாயிலே சென்ற வாரம் இப்படிச் சண்டமாருதமாகப் பேசினார் — மேஜை பிளவுபடும் அளவுக்கு — குத்திக் குத்திப் பேசியதாம், மோதிலால் மைந்தரின் விளையாட்டு பொம்மை!

உடனே பத்திரிகை நிருபர் ஒருவர் எழுந்தாராம். "அய்யா! சாப்ளின் துரையே! உங்களது மாதச் செலவு எவ்வளவு என்று கணக்குச் சொல்ல முடியுமா?"— என்று கனைத்துக் கொண்டே கேட்டாராம். சார்லி கண் கலங்கிவிட்டார். "ஆமாம்; என் செலவு 250-ரூபாயையும் தாண்டித்தான் போய்விடுகிறது!"-என்று மழுப்பலாக பதிலிறுத்தாராம்!

அவர் மட்டும் ஐதராபாத் நிஜாமைப் போல செலவு செய்வாராம்; ஊரார் மட்டும் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டுமாம்!—தோற்றான்! தோற்றான்!! சார்லி சாப்ளின் பின்னங்கால் பிடரியில் அடிபட தோற்றோடி விட்டான்! அவனால் இவ்வளவு பெரிய 'தமாஷ்' செய்ய முடியுமா? வாழ்க, இந்திய நாட்டு அரசியல் சாப்ளின்! வளர்க, அவரது 'காமிக்' பேச்சு! நகமும் சதையும்போல அவரும், அவருடைய நகைச் சுவையும் ஒன்றாக வாழட்டும்! இந்திய உபகண்டத்து மக்களுக்கு சிரிப்பு வழங்கட்டும்!

ஓ, திண்ணைப் பேச்சாளர்களே! தெரு விளக்கடியிலே திரண்டிருக்கும் 'விருதா' வீரர்களே! ஊருக்கு உபதேசிகளே! தயாராக இருங்கள்! அடுத்த காங்கிரஸ் எலக்ஷனுக்கு ராஷ்டிரபதியாக போட்டியிட, அபேட்சா பாத்திரம் தாக்கல் செய்ய தயாராயிருங்கள்!

★

## அரசியல் தவளை

எங்கேயாவது 'கசா முசா' என்று ஓயாமல் ஓசை கேட்கிறதா? நிச்சயம் அது அலைகடலாயிருக்க முடியாது. சமுத்திரம் முச்சந்திக்கு வந்தா முழக்கமிடும்? சே; சே! அந்தக் கூச்சலுக்கு வேறு ஏதாவதுதான் காரணமாக இருக்க வேண்டும். ஓ, இதோ கண்டு பிடித்து விட்டேன்! மழைக் காலத்திலே அந்தச் சப்தம் வந்தால் அதற்குக் காரணம் தவளையாக இருக்க வேண்டும்! கோடைக் காலத்தில் அந்தக் கூச்சல் கேட்டால், அதற்கு நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அவர்களது வாய் அசைகிறது; திராவிட இயக்கத்தவரைத் திட்டுகிறது - என்று பொருள்!

நீதிபதி ராஜமன்னாரின் வாய் அனாவசியமாக அசைவதை நீங்கள் யாராவது பார்த்திருக்கிறீர்களா? நீதிபதி சோமசுந்தரம் வாய் திறக்கிறாரென்றால் நிச்சயம் அந்த இடம் 'ஐகோர்ட்' கூடமாகத்தான் இருக்க வேண்டும். தப்பித்தவறி அந்தப் பெரிய மனிதர்கள் வாயைத் திறந்தாலும் அவர்கள் யாரையும் புண்படுத்தி, அதிலே வழியும் இரத்தத்தில் நாக்கை வைத்து சுவைகொட்ட மாட்டார்கள்.

நம்முடைய அய்யர் இந்த இலக்கணத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். தாக்குதல் என்னும் ஓமகுண்டம் வளர்த்து, அதில் வசைபுராண யாகம் நடத்தாமல் அவர் பொழுதுபோக்குவதே கிடையாது.

ஏப்ரல் 3-ந்தேதியன்று அவர் மதுரையில் பேசும்போது ஆரிய-திராவிடப் பிரச்சினையைப் பற்றியும், நம்முடைய குறுகிய மனப்பான்மையைப் பற்றியும், அந்த விரிந்த உள்ளத்தார் விரிவுரையாற்றினராம்!

நீதிபதி எப்போது நடுத்தெருவுக்கு வந்தார் என்று யாராவது கேட்டுவிடாதீர்கள். அவர் எப்போதும் நடுத்தெருவிலே தான் நின்றுகொண்டிருக்கிறார். எப்போதாவதுதான் நீதி மன்றத்துக்குப் போவார்! இன்றைய நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அன்றைய மதுரை மாவட்ட சப் ஜட்ஜாக இருந்தபோது, நம்முடைய அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி ஒருசமயம் அவரது தலையிலே ஓங்கி ஒரு குட்டு குட்டி உட்காரவைத்திருக்கிறார்! போர்ப் பிரச்சாரக் கூட்டமொன்றுக்குத் தலைமை வகிக்கும்போது, "அணிலும் குரங்கும் ராமனுக்குத் துணை செய்ததைப்போல பொதுமககளும் போருக்கு உதவி செய்ய வேண்டும்"—என்று கேட்டுக்கொண்டாராம். அப்போது கூட்டத்திற்கு வந்திருந்த அழகிரி அவரது உவமையைக் கேட்டு, கூட்டத்தார் நகைக்கும் அளவுக்கு நிலைமையை வளர்த்துவிட்டாராம்.

அய்யர் அந்தக் காலத்திலிருந்தே நம்மிடம் பாய்ந்து கொண்டிருக்கிறார். இவர்என்ன கல்கியைவிடக் கோவக்காரரா? அல்லது ஆச்சாரியாரைப்போல ரோஷக்காரரா? பாவம்; பரிதாபத்துக்குரியவர்.

★

## 'ஊர் சுற்றி'கள்!

இன்னொரு பரிதாபமான செய்தியை ஏப்ரல் 1-ந்தேதியன்று நிதி அமைச்சர் சட்டசபையிலே வெளியிட்டார்.

சட்டசபையிலே சமாதி நிலையிலிருக்கும் ஏ. பி. ஷெட்டி தன்னுடைய சுற்றுப் பயணச் செலவுகளுக்காக ரூ. 4667—11—0 பெற்றிருக்கிறார்.

ராமநாதபுரம் ராஜா பதினன்கே நாட்கள்தான் சுற்றுப் பிரயாணம் செய்தார். அதற்காக அவர் பெற்ற தொகை ரூ. 1326—6—0. ஆனால் 61 நாட்கள் சுற்றுப் பயணம் செய்த ஆச்சாரியார் 1452-3-0 தான் பெற்றிருக்கிறார்!

ஆறுமாத காலம் ஆட்சி புரிந்த ஜோதி அம்மாள்கூட ஒரு எழுநூற்றி ஐம்பது ரூபாய்க்கு கணக்கு வைத்திருக்கிறார்.

ஐயோ! பொதுமக்களின் வரிப்பணம் இப்படியெல்லாமா செலவழிய வேண்டும்? கொடுமை! கொடுமை!

வரிப்பணத்தை விரயமாக்கிக் கொண்டு அமைச்சர் வெங்கிடசாமி நாயுடு, நூறு நாட்களை வெளியூர்களிலேயே கழித்திருக்கிறாராம்!


இந்த நிலையிலே சுற்றுப் பயண அலவன்ஸ்களை வாங்கிக் கொண்டு மந்திரிமார்கள், வீட்டு அலவன்ஸ் என்னும் பெயரிலும், கார் அலவன்ஸ் என்னும் பெயரிலும் ஆயிரக் கணக்கிலே சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

வருஷத்தில் 364 நாட்கள் உல்லாச பவனிபோகும் மந்திரிமார்களே! 'மாலும்' ஒரு யோசனை சொல்கிறான்; அதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். இரவு பகலென்று பாராமல் சபாநாயகரும், சட்டசபை மெம்பர்களும் சட்டமியற்றிக்கொண்டிருக்கும்போது, தேனாம்பேட்டை எக்சிபிஷன் மைதானத்திலே கழுதைப் போல சுற்றிய இராமசாமிப் படையாச்சியாரே! நீரும் கேளும். குளிர்க் கண்ணாடி மாட்டிக் கொண்டு குளிர்ப்பார்வை செலுத்தும் 'கனம்'களே! உங்களுக்கும்தான் சொல்கிறேன்!

இனிமேல் நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து பயணம் போக வேண்டாம். புதிதாக ஒரு மந்திரியை நியமனம் செய்யுங்கள். "சுற்றுப்பயண" இலாக்கா என்று ஒரு புதிய இலாக்காவைச் சிருஷ்டித்து அவரிடம் ஒப்புவித்து விடுங்கள். வருஷம் முழுவதும அந்த மந்திரியார் சுற்றுப்பிரயாணம் நடத்தட்டும்! கண்காட்சிசாலை முதல், கக்கூஸ்வரை ('பிரைவேட்' கக்கூசையல்ல; பொதுஜன—அதாவது 'பப்ளிக்' கக்கூசைத்தான் குறிப்பிடுகிறேன்) அவர் திறப்புவிழா செய்து வைக்கட்டும்.

'மாலும்'யின் இந்த யோசனை நிறைவேறினால் எந்த மந்திரி ஊரா்ள்கிறார், எந்த மந்திரி ஊர் சுற்றுகிறார் என்கிற விபரம் பொதுமக்களுக்குப் புரிந்துவிடும்.

★




சிறு கிராமம்-விரல்விட்டு எண்ணும் அளவில்தான் குடிசைகள்; ஐந்தாறு இருக்கும். இடையே ஒன்றிரண்டு ஓட்டுக்கூரைவேய்ந்த வீடுகளும் இருக்கத்தான் செய்தன. கிராமத்தின் ஒரு கோடியில் மாடன் கோயிலோ இயக்கி கோயிலோ தெரியவில்லை, இடிந்து பாழடைந்து கிடந்தது, உருவ மற்ற ஒன்றுக்கு உருவம் கொடுக்க முயற்சித்து, அதில் தோல்வி கண்டு விட்டதே என்று பரிதாபப் படும்படி.

சரியான வண்டிப்பாதைகூட கிடையாது அங்கு செல்வதற்கு. நடந்துதான் செல்ல வேண்டும்; அதுவும் அடர்ந்து பசுமையுடன் தோன்றும் அந்த மாந்தோப்பை கடந்த பிறகுதான்.

மரங்களில் மாம்பழங்கள் நிறைய பழுத்துத் தொங்கின. கிராமத்துச் சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

"டேய் அரசு! சீக்கிரம்டா. அதோ, உன் தலைக்கு மேலே தொங்குதே ஒரு பழம், ஜோரா, சிவப்பா- டேய் – டேய்- போடு டா எனக்கு."

மரத்தின் உச்சாணிக் கொம்பில் சிறுவன் ஒருவன் கிளைக்குக் கிளை தாவி பழங்களைப் பறித்து கீழே எறிந்து கொண்டிருந்தான். சிறிது நல்ல பழமாயிருந்தால் முதல் கடி அவனுடையது தான்.

"டேய் முத்து! பிடிச்சுக் கோடா!"

ஓங்கி விட்டெறிந்தான் கீழே. முத்து நிமிர்ந்து பார்ப்பதற்குள் கனிந்த அம் மாம்பழம் முத்துவின் முகத்தைப் பதம் பார்த்து விட்டு கீழே வழிந்தது. கதகளி ஆட்டக்காரன் கூத்துக்கு தயாராவது போலிருந்தது தோற்றம். 'ஹோ–ஹோ' வென்று சப்தமிட்டுச் சிரித்தனர் மற்ற சிறுவர்கள். அதற்குள் பார்த்து விட்டான் ஒரு சிறுவன், தோட்டத்தின் மறு கோடியில் தோட்டக்காரன் வருவதை.

"டோய்! வாங்க டோய்! அதோ தோட்டக்கார சோங்கண்ணன் டோய்!"

எப்படித் தான் மறைந்தார்களோ தெரியவில்லை! சிட்டாய் பறந்து விட்டனர் சிறுவர்கள். சப்தமிட்டவாறே ஓடி வந்த தோட்டக்காரனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. யாருக்குத்தான் வராது கோபம்! பகுதி பகுதியாய் கடித்துப் போட்ட மாம்பழங்கள் கீழே சிதறிக் கிடப்பதைப் பார்த்து, யாராவது கவிஞன் வேண்டுமானால் எப்படி வர்ணிக்கலாமென்று யோசனை செய்யலாம். ஆனால் அதைப் பார்க்கும் தோட்டக்காரனுக்கு வயிறெரியாமல் என்ன செய்யும்!

மரக்கிளையில் உட்கார்ந்திருந்த அரசு சப்தம் செய்யாது கிளையோடு கிளையாய் மறைந்து நின்றான். இருந்தும் மாம்பழம் தின்பதை மட்டும் நிறுத்தவில்லை. அதன் ருசி கீழே நின்ற தோட்டக்காரனைப்பற்றிய பயத்தை முறியடித்து விட்டது.

"கழுதைங்க - ஒருவன் கூட கையிலே சிக்கினனில்லையே, சவங்களை தலையை தட்டியிருக்க மாட்டேன்...?"

'டபக்'கென்று அவன் தலையில் மாம்பழம் ஒன்று விழுந்தது. அண்ணாந்து பார்த்தான்.

"டேய்! அகப்பட்டுக் கிட்டியா?"—கத்தினன் உரக்க.

அரசுவின் கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. தவறி விழுந்தான். நல்ல காலம்; தோட்டக்காரன் மேலேயே விழுந்து விட்டான். இல்லாவிட்டால் அடி பலமாகப் பட்டிருக்கலாம்.

அரசுவும் தோட்டக்காரனும் புரள ஆரம்பித்தனர். சிறுவன் படுசுட்டி–தட்டுத் தடுமாறி எழுந்து விட்டவன் பிடித்தான் ஓட்டம். என்ன நடந்தது என்பது தெரிந்து எழுந்திருந்து பார்ப்பதற்குள், சிறுவன் தோட்ட மதில் சுவர்மேல் உட்கார்ந்திருப்பதைத்தான் காண முடிந்தது சோங்கண்ணனால். துரத்திச் சென்றான். சிறுவனை பிடிபடுபவன்! விடவில்லை தோட்டக்காரனும்; பின்னாலேயே ஓடினான்.

......பொறுப்பற்ற குறும்புத்தனம், அந்த 'அரும்பி'ன் பிறப்போடு வந்தது... இடையில் குறுக்கிட்ட போராட்டமோ... அவனைக் குடும்பத்தின் தலைவனாக்கிற்று!...

★

எதுவுமே நடக்காதது போல், தாறு கட்டிய வேட்டியை அவிழ்த்து விட்டுவிட்டு, அதனாலேயே தனது வாயையும் துடைத்தவாறு வீட்டினுள்ளே நுழைந்தான் அரசு. அவனது சிறிய தாயார் தனது மூன்று வயதுக் குழந்தையை வைத்து சீராட்டிக் கொண்டிருந்தாள். நேரே உள்ளே சமையல் கட்டுக்கு சென்று கீழே உட்கார்ந்தான் அவன். கனகம் - அதுதான் அவளது பெயர், ஒரு தட்டை எடுத்து அவன் முன்னால் வைத்து, பழைய அமுதை அதில் பிழிந்து வைத்தாள்-அருகில் நெல்லிக்காய் துவையலையும் வைத்தாள். அவனுக்கு மிகவும் பிடித்தமான வஸ்து அது. சிறுவன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டான். அவளோ சிரித்த முகத்தோடேயே இவ்வளவையும் செய்தாள்.

"தம்பி! கொஞ்சம் மோர் ஊத்தட்டுமா?"

"ஒண்ணும் வேண்டாம் போ!"

அப்போது வெளியிலிருந்து ஒரு அதட்டல் கேட்டது.

"இந்தாம்மா, யாரு உள்ளே?"–கனகம் நிமிர்ந்து பார்த்து சிறிது திகைப்புடன் வெளியே வந்தாள்.

அரசு வேகமாக சாப்பிட ஆரம்பித்தான்.

"இந்தாம்மா - சும்மா நான் சொல்லிக்கிட்டே யிருக்கமாட்டேன்; கை காலை ஒடிச்சுவிட்டுவிடுவேன், ஆமா."

'என்னப்பா, என்ன நடந்தது?'

"என்ன நடந்ததா? படுபாவிப் பசங்க என் மாமரத்தை சூறையாடிட்டானுங்க."

"அரசுவா? அவன் இங்குதானே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறன்"

"சாப்பிடுவான், சாப்பிடுவான். கொஞ்சம் அடக்கி வையுங்க—இல்லேலே, மரியாதை கெட்டுப் போகும்."

"பேசாமெ, வீட்டிலே உட்கார்ந்திருக்கிற பையனைப் பார்த்து ஏதாவது உளறுதே!"

"உளற்றேனா! உங்க செல்லமெல்லாத்தையும் வீட்டோடவே வச்சுக்குங்க."

"எல்லாம் நாங்க ஒழுங்காகத்தான் வளர்க்கிறோம்-வேறு பிள்ளைகளைப் போய்க் கேளு, அதுக்கு."

சிறிது கோபத்தோடேயே இதைச் சொன்னாள் கனகம். சோங்கண்ணனுக்கும் ஆத்திரம் தான். ஆனால் பெண் பிள்ளையிடம் போய் வீருப்பு என்ன வேண்டியிருக்கிறது என்று நினைத்தானோ என்னவோ முனகியவாறே திரும்பிவிட்டான்.

"அப்பன் ஊராருக்கு புத்தி சொல்ல கிளம்பிடுறான்-அம்மை, அம்மையா இவ? அறுதலி-கல்யாணம் பண்ணிட்டா[ம]ாத்திரம் அறுதலிப் பட்டம் மறைஞ்சிடுமா என்ன? அறுதலி வளர்க்கும் பிள்ளை தறுதலையாத் திரியாமெ வேறு எப்படித் திரியும்?"

இவ்வார்த்தைகள் கனகத்தின் காதுகளில் விழாமலில்லை. மலர்ந்திருந்த அவள் முகம் அப்படியே கூம்பி விட்டது.

அவளை முறைத்தவாறே வெளியே குதித்தோடினான் அரசு.

அவளுக்கு மட்டும் தெரியாதா என்ன, பையனுடைய அடங்காப் பிடாரித்தனம்?ஏதாவது வம்புச் சண்டை நடந்தது என்றால் அதற்குக் காரணம் அரசுவாகத்தானிருக்கும். கனகம் அங்கு வந்தது முதலே அரசுவுக்கு அவளைப் பிடிப்பதில்லை. எவ்வளவோ அன்பாய்த்தான் நடத்தி வந்தாள் அவனை. ஏனோ அவன் அவற்றையெல்லாம் மாறுபாடாகவே எடுத்துக் கொண்டான். சிறுவன், அப்படித்தான் இருப்பான் என்றால் மனசு என்னவோ ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறது. இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

★



கனகம்; பெயர் நன்றாகத்தானிருக்கிறது. இளமையின் வளர்ச்சியினால் அழகு குதித்தோடும் மங்கைப்பருவம். தனக்கும் வாழ்வு கிட்டுமா என்று ஏங்கியிருந்தாள் அவள். அது ஒரு காலம். இன்று, கண் நிறைந்த கணவன்—அதுவும் பொதுநல ஊழியன்; பேச்சாளி; ஏதோ கொஞ்சம் நிலம். உழுது பயிரிட்டு வாழ்வை செம்மையாக நடத்தி வருகிறார்கள். கிராம வாழ்க்கை அதற்கு இன்னும் வளமையைக் கொடுத்தது. ஆனால் அன்று—

திடீரென்று வாழ்வு இழந்தாள். ஆறு மாதக் கைக் குழந்தையை இவள்கையில் ஒப்படைத்துவிட்டு, கொடுமையாகத் தாக்கிய அம்மை நோயைச் சாக்கிட்டு மறைந்துவிட்டான் இவளது கணவன், இவ்வுலகத்தை விட்டே. கைம்மை அவ்வளவு எளிதில் ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய விஷயமல்லவே நம் நாட்டில்!

அவர்கள் மிகவும் ஏழைகள் அல்ல—ஆனால் நிம்மதியாக வாழ்க்கை நடத்தக்கூடிய பணக்காரக் குடும்பமும் அல்ல! ஆசைக் குழந்தையின் அரவணைப்பில் வாழ்நாளைப் போக்கிவிட முடியும் என்றே நம்பினாள். வயது இருபதைக்கூட எட்டிப் பிடிக்காத அந்தப் பெண் அவ்வளவு நம்பிக்கை வைக்கக் கூடாதுதான். என்ன செய்வது? நம்பிக்கையில் தானே வாழ்வுச் சக்கரமே சுழல்கிறது!

★

அந்த நாள்—அவள் மறக்கமுடியாத அந்த நாள். தனது ஒன்றரை வயது கைக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு சென்றிருந்தாள் கூட்டத்துக்கு. இளைஞன் ஒருவன் ஆவேசமாகப் பேசினான். நமது சமூகத்திலுள்ள குறைபாடுகளை, ஜாதி என்ற பெயரால், கடவுள் என்ற மந்திரத்தால், மதத்தின் போதை வீசி, எப்படி ஒரு சமூகம் ஏழைகளை உருக்குலைத்து வைத்திருக்கிறது என்பதை ஆதார விளக்கங்களோடு, உணர்ச்சி பொங்க அவன் பேசும்போது, வந்திருந்த பழுத்த வைதீகர்கள்கூட 'சபாஷ்' பட்டம்கூறி, தலையாட்டியவண்ணமிருந்தனர். விதவை மணத்தைப் பற்றி அவன் பேசும்போது கனகம் தன்னையறியாது காதுகளைக் குவித்துவைத்துக் கேட்டாள்.

எப்போது கூட்டம் கலைந்தது என்பதுகூட அவளுக்குத் தெரியாது. மடிமீது துயில்கொள்ளும் குழந்தையை அணைத்தவாறு மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள். நினைவுகள் அவள் வசமின்றி எங்கெங்கோ அலைந்து திரிந்ததால், சுற்றுப்புறத்தை மறந்துவிட்டாள்.

''என்னம்மா இது — கூட்டம் முடிந்து ஜனங்களெல்லாம் போயிட்டாங்க, இப்படி உட்கார்ந்திட்டீங்களே! எங்கம்மா போகணும்?''

''ஹாங்! என்ன?''

பரக்கப் பரக்க விழித்தாள். சுற்றிலும் பார்த்தபிறகுதான் நிலைமையைப் புரிந்துகொண்டாள்.

'ஒண்ணுமில்லீங்க - பக்கத்திலே தான் வீடு-போயிடுறேனுங்க'

எழுந்து வேகமாக நடக்க ஆரம்பித்தாள். முன்னிருட்டுக் காலம்—கருமை — சிறிது அச்சத்தைக் கொடுக்குமளவிலேயே இருந்தது. ஜன நடமாட்டமில்லை. கால்கள் முன்னுக்கு நகர மறுத்தன.

'எங்கம்மா போகணும்? நானும் வர்ரேன் துணைக்கு — வீடு வரை வந்துவிட்டு திரும்பிவிடுகிறேன்'

'பரவாயில்லீங்க'

ஆனால் அக்குரலில் தொனித்த சஞ்சலத்தைத் தெரிந்து கொள்ளாதிருக்கமுடியவில்லை அந்த ஆடவனால். மத்திய வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் பிராயம்—ஆனால் யௌவனம் மறையவில்லை அவனது உடம்பில். பேச்சிலோ, முகத்திலோ, தடுமாற்றமோ—ஐயமோ காணோம். ஓரக் கண்ணால் பார்த்தாள், பின்தொடருகிறானா இல்லையாவென்று. சிறிது அனுபவமடைந்தவன்; புரிந்துகொண்டான். அவளும் புரிந்துகொண்டாள், சிறிது நேரத்துக்கு முன் நடந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கிய நபர்தான் அவர் என்பதை!

★

இப்படி ஆரம்பித்த அவர்களின் நட்பு வளர்ந்தது. வீட்டாரின் குறுக்கீடு தடைப்படுத்தவில்லை. அவனும் பெயருக்கேற்றபடி மாணிக்கமாகவே யிருந்தான். அவனது நெஞ்சுரம், நேர்மை, கனகத்துக்கு தைரியத்தைக் கொடுத்தன. மாணிக்கத்துக்கு பத்து வயதில் பையன் ஒருவன் இருக்கிறான் என்பதுகூட அவளுக்கு ஏமாற்றத்தை அளிக்கவில்லை. அவன் பேரில் கொண்ட ஆசை அவ்வளவு வேரூன்றியிருந்தது அவளது நெஞ்சில். ஊரார் ஏச்சை உதறிவிட்டு மறுமணம் செய்துகொண்டாள்.

புத்திசாலியான மாணிக்கம் மனைவியுடன் கிராமத்துக்கே சென்று விட்டான். வாழ்க்கைப் படகு அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது. அரசுவின் போக்குதான் இடை இடையே அவளது நிம்மதியைக் குலைத்ததே தவிர, வேறு எவ்விதகுறையுமில்லை.

இந்தச் சமயத்தில்தான் வந்தது போராட்டம். அவனது ஆசை மகனின் எதிர் கால வாழ்வையல்லவா பாழாக்க வந்து விட்டது அந்த வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டம்? பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா அவனால்? போராட்டத்தில் கலந்து கொள்ள புறப்பட்டுவிட்டான் - கனகமும் தடையேதும் சொல்லவில்லை. மகிழ்ச்சியுடனேயே வழியனுப்பினாள்.

சென்னையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் மாணிக்கம் டிரெயினில். சென்னை, கனகம். அரசு. இப்படி மாறி மாறிக் காட்சி யளித்துக் கொண்டிருந்தன அவனது மனக் கண்முன். எப்போது தூங்கினானோ தெரியாது அவனுக்கு.

டிரெயின் சடாரென்று நின்றது. ஒரே ஆரவாரம், கூக்குரல். விழித்துக் கொண்டான். ஏதோ ரெயில்வே ஸ்டேஷன். வெளியே பார்த்தான். எண்ணற்ற மக்கள் கூட்டம். டிரெயினிலிருந்து வெளியே குதித்த முதல் ஆள் அவன் தான்.

போலீஸ் தடியடி - கலாட்டா- ஜனங்கள் திசை தெரியாது அங்குமிங்கும் பறந்தனர்.

காலை பதினொரு மணி. இன்னொரு டிரெயின் வந்தது. நின்றது அதுவும். ஒரே கூட்டம். மக்களிடையே எழுந்த கொந்தளிப்பு வானத்தை பிளந்து வெளிக் கிளம்பும் கோடையிடியை நினைப்பூட்டியது.

கும்பலில் மாணிக்கத்தைக் கண்ட அவனது முன்னாள் நண்பன், '' மாணிக்கம் '' என்று கத்தினான். அவ்வூர்க் கழக செயலாளராயிருக்கிறான், அவன். மாணிக்கம் திரும்பிப் பார்த்தான். '' செல்லமணி '' என்றழைத்தவாறு அவனருகே ஓடினான்.

ஆனால் அதற்குள் ஆரம்பமாகிவிட்டது போலீஸ் தடியடி.

அதில் சிக்கித் தவித்துச் சிதறும் வெறி கொண்ட மக்கள்கூட்டம்- தொடர்ந்து டுமீல், டுமீல் என்ற சப்தம் - பாவம்! அந்த ஏழை மக்கள் இந்த சப்தத்திற்கு மனித உடல்களைப் பிய்த்தெறியும் சக்தியிருக்கிறது என்பதை உணரவில்லை.

இல்லை, உணர்வதற்குரிய மனநிலையோ, அவகாசமோ கிடையாதோ என்னவோ! வெள்ளாட்டுக் கும்பலிடையே சிங்கத்தின் கர்ஜனை கேட்டால் என்ன நடக்கும்...? வெருண்டோடினர்.

ரெயில் கம்பார்ட்மென்ட் ஒன்றிலிருந்து ''ஐயோ'' வென ஓர் அலறல் கிளம்பி மாயும் – நெஞ்சு வெடிக்கும் குமுறல் ஒன்று'ஹோ' வென்ற இரைச்சலுடன் கலந்து ஓயும். 'அம்மா! அப்பா! ஐயோ!' என்ற கூக்குரல்கள் அங்கே இங்கே, எங்கேயும் அலறி வெடிக்கும்.

சிறிது நேரத்தில் அந்த இடம் சுடுகாட்டு அமைதியில் ஒன்றிக் கலந்தது, ஓரிரு செந்தலைகள் அங்குமிங்குமாக காட்சியளித்தன. உச்சி வெயிலில் அந்தத் தோற்றமானால், இரவு நேரம் எப்படி யிருந்திருக்கும்! இயற்கை கூட பயந்து ஒடுங்கி விட்டதோ என்னும்படி இருந்தது.

எங்கிருந்தோ முனகல் சப்தம். தண்டவாளத்தின் மறுபுறமாக இருண்டு கிடக்கும் பள்ளத்தாக்கின் உள்ளிருந்துதான் வந்தது. தரையோடு தரையாக ஒரு உருவம் நகர்ந்து சென்று கொண்டிருந்தது. துப்பாக்கிப் பிரயோகத்தின் பலன், மனிதன் ஊர்வனமாக மாறியிருந்தான் அந்த இடத்தில்.

ரஸ்தாவை அடைந்தானோ இல்லையோ. அவனது உணர்வும் அழிந்தது. கவனிப்பாரற்றுப் போனதை நினைத்தால் அவனது கெட்ட காலம்தான் என்று தோன்றும். ஆனால் தற்செயலாக அவ்வழிச்சென்ற 'கார்' ஒன்று அவனருகில் வந்து நிற்கக் காரணம்?

ஹாட்டும் ஷூட்டும் அணிந்த ஒருவர் அவசரமாக இறங்கினார். மார்பில் காது வைத்துக் கேட்டார். மூக்கில் விரல் வைத்துப் பார்த்தார். உயிர் இருப்பது தெரிந்தது.

''டிரைவர்!''

காரில் தூக்கி வைத்து கிடத்தினார்கள். பறந்து சென்றது கார்.

* * *

கனகம் கணவனின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தாள். காற்றில் மிதந்து வந்து கிடைத்த ஓரிரு செய்திகள் அவளை திகிலடையச் செய்தன. பத்திரிகைகள் கிடைக்கக்கூடிய இடத்திலா இருக்கிறதுஅந்தக் கிராமம்-இல்லையே! வாரத்துக்கொரு முறை, தவறினால் இரண்டு வாரம், சமயத்தில் மாதக் கணக்காகக்கூட தபால்கள் வருவதில்லையே! கூட்டியும் குறைத்தும் அங்குமிங்குமாக துப்பாக்கிப் பிரயோகம், தடியடி, சிறைவாசம், இப்படிப்பட்ட வார்த்தைகளைத்தான் கேட்க முடிந்தது அவளால்.

மாணிக்கத்திடமிருந்து எந்தவித தகவலும் இல்லை. கனகத்தின் முகத்தில் கூத்தாடிக் கொண்டிருக்கும் இளமுறுவல் எங்கோ மறைந்துவிட்டது. சிறுவன் அரசுவின் போக்கிலோ எந்தவித மாற்றமும் கிடையாது. சிலைபோல் உட்கார்ந்திருக்கும் சிற்றன்னையை சிறிது நேரம் நின்று கவனிப்பான் சில சமயம். மறுகணம் ஓடிவிடுவான், ஏதாவது புதுவிதத் தகராறுகளை வருவித்துக் கொள்வதற்கு.

மாடன் கோயிலருகே இன்னொரு சிறுவனுடன் கட்டிப் புரண்டு கொண்டிருக்கும் அரசுவை அவ்வழிச் சென்ற தபால்காரன் விலக்கிவிட்டு சமாதானப் படுத்தினான்.

''இந்தா. இதை உங்கம்மாகிட்ட கொண்டு போய் கொடு.''

கடிதம் ஒன்றை அரசுவின் கையில் கொடுத்துவிட்டு வந்த வழி திரும்பினான் தபால் சேவகன்.

சிறுவர்கள் இருவரும் கடிதத்தை உற்று நோக்கினர். கவரை உடைத்து திறந்து பார்த்தான் அரசு. ஏதோ ஒன்றிரண்டு கூட்டிப் படிக்கத் தெரியும் அவனுக்கு. கடிதத்திலும் நாலைந்து வரிகள் தான் இருந்தன.

படித்ததும் அரசு அப்படியே மௌனமாகி விட்டான். நண்பனின் தொண தொணப்பு அவனது காதுகளில் விழவில்லை. எதிரே காய்ந்து கிடக்கும் வயல் வெளியை நோக்கி நடந்தான். நாலைந்து அடி பின் தொடர்ந்த மற்ற சிறுவனும் அரசுவின் மௌனத்தைப் பார்த்து அப்படியே நின்று விட்டான்.

திடீரென்று திரும்பினான் அரசு.

''டேய், ஏதாச்சும் கடுதாசு வந்ததுன்னு அம்மா கிட்டே போய் சொன்னே, கொண்ணு போடுவேன் கொண்ணு!'' -என்று மிரட்டி விட்டு ஓடினான் மற்றவனது கண்களுக்கு மறையு மட்டும் ஓடினான்.

மாலை மாய்ந்த நேரத்தில்தான் வீடு திரும்பினான் அரசு. கனகத்தின் அருகில் சென்று உட்கார்ந்தான். மகனை ஏறிட்டுப் பார்த்தாள். அம்முகத்தில் படர்ந்திருந்த உணர்ச்சியற்ற தன்மை அவளை எதுவும் புரிந்து கொள்ள முடியாதபடிச் செய்து விட்டது. சாப்பாடு வேண்டாம் என்று சொன்னான். வற்புறுத்துவதில் பயனில்லை என்பதை அவளறிவாள்.

தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையின் அருகில் சென்று அதையே பார்த்த வண்ணமிருந்தான். கனகத்துக்கு சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது இது.

* * *

மறு நாள்; தங்கையை எடுத்து கொஞ்ச ஆரம்பித்தான். திகைத்தாள் கனகம். சிற்றன்னையைக் கேட்காமலேயேவாய்க்காலுக்குச் சென்று தண்ணீர் மொண்டு வந்து கொடுத்தான். வீட்டிலுள்ள துணிமணிகளை தூக்கிச் சென்று துவைத்துக் கொண்டு வந்தான். பிள்ளைகளுடன் விளையாடப் போகவில்லை. இந்தத் திடீர்மாற்றத்தைப் புரியாது தடுமாறினாள் கனகம். அவளது நெஞ்சாழத்திலிருந்து மகிழ்ச்சியலைகள் உருவெடுத்து வெளிக்கிளம்ப ஆரம்பித்தன.

இருபத்தினான்கு மணி நேரமும் சிறியதாயாருக்கு உதவுவதிலேயே நேரத்தைப் போக்கினான் அரசு. பக்கத்து வீட்டுப் பெரியவருடன் சென்று வயல்களைக் கவனித்தான். வேலையும் செய்தான். உடனிருந்தோர் வியக்கும் வண்ணம்.

★

வயலில் நிரம்பி நின்ற தண்ணீரை வடிய வைப்பதற்காக வரப்பில் சிறிது இடம் பண்ணிக் கொண்டிருந்தான் சம்மட்டியால். சறுக்கியது. 'ஹா' வென்ற அலறல். கை சம்மட்டி ஆழமாக அவனது முழங்காலை பதம் பார்த்து விட்டது. குலதர்மக் கல்வி முறையைப் பின் பற்றிய தோஷமோ என்னவோ?

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# திரும்பிப்பார்!

## ஆச்சாரியாரின் ஆசான்

அடக்குமுறை வெறித் தாண்டவமாடிய ஆச்சாரியார், பட்டம் தாணுப்பிள்ளை-போன்றவர்களுக்கு ஆசான் யார் தெரியுமா? இட்லர் அல்ல; முசோலினியுமல்ல; ஆங்கிலேயர்கள் தான்! அவர்கள் இந்த மண்ணிலே என்னென்ன அக்கிரமங்கள் செய்தார்களோ அதையெல்லாம் அப்படியே கிரகித்துக் கொண்டு, அவைகளைத்தான் ஆச்சாரியார் போன்றவர்கள் நம்பித் திருப்பினார்கள்!

சிப்பாய் கலகம் துவங்கியதும் ஆங்கிலேயரும் இரக்கமற்றவர்களாக மாறினார்கள். ஏராளமான மக்களை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள். அலகாபாத்திலிருந்து கான்பூருக்குச் சென்ற ஆங்கில தளகர்த்தனான நீல் என்பவன் வழி நெடுக ஒரு மரம் தவறாமல் மக்களைத் தூக்கிலிட்டுக்கொண்டே சென்றானாம்!

அக்பரும், அசோகரும் சாலையோரத்திலே பயிர் செய்த மரங்களெல்லாம் ஆங்கிலேயர் காலத்தில் இப்படிப் பயன்பட்டிருக்கின்றன!

★

## நோயாளியின் கதை

அந்தக்கால துருக்கியை சரித்திரப் புத்தகம் 'ஐரோப்பாவின் நோயாளி' என்று அழைக்கிறது. இந்தப் பெயரை யார் வழங்கியது தெரியுமா?

1853-ம் ஆண்டு ருஷ்யநாட்டு ஜார் மன்னன் ஆங்கில நாட்டுத் தூதுவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, துருக்கியைப் பற்றிக் குறிப்பிடுகையில், "நாம் ஒருநோயாளியை மடியில்வைத்துக்கொண்டிருக்கிறோம். அவனுக்கு நோய் முற்றிவிட்டது. இனி அவன் தேறுவது துர்லபம். திடீரென்று அவன் நம் மடியிலேயே செத்தாலும் செத்துவிடலாம்" — என்று கூறினாராம். ஜார் துருக்கியைப் பற்றி சொன்ன அடைமொழி சரித்திரத்தில் அப்படியே நிலைத்துவிட்டது.

★

## தேசிய கீதம்

தேசிய கீதங்கள் ஒரு நாட்டின் ஜீவத் துடிப்புகளை பிரதிபலிக்கவேண்டும். இத்தாலி நாட்டின் விடுதலை வீரனும் கரிபால்டியின் படையினர் உணர்ச்சி கொப்புளிக்கும் கவிதையொன்றை யுத்த கீதமாக அமைத்துக் கொண்டனர். 'ஓ, அந்நியனே! இட்டாலி நாட்டிலிருந்து ஒழிந்து போ!' — என்பதைப் பல்லவியாகக் கொண்டது அந்தப் பாட்டு!

பிரான்சு நாட்டிலும் அப்படித்தான்! லூயியின் தலையை 'கில்லெட்'டினுக்கு பலியாக்கிய பின்னர், பிரெஞ்சு மக்கள் களிப்பிலாழ்ந்தார்கள். "நாங்கள் சகல தேச மக்களுக்கும் தோழர்கள்; சகல தேச முடி மன்னர்களுக்கும் பகைவர்கள். உங்களுடைய அரசர்களுக்கு விரோதமாகஎழும்படி நாங்கள் உங்களை வேண்டிக் கொள்கிறோம்"—என்ற கருத்தமைந்த கோஷத்தை அவர்கள் விண்ணதிர முழக்கினார்கள். இதற்குத் தகுந்தாற்போல் ரைன்நதிச் சேனைக்காக ரூஜேடிலைல் என்பவன் இயற்றிய யுத்த கீதம் கொழுந்துவிட்டெரிகிறவிடுதலையுணர்ச்சியைத் தூண்டி விட்டது. 'மார்சேல்ஸ்' என்று வழங்கும் அந்த கீதம்தான் இன்றளவும் பிரான்சு நாட்டின் தேசிய கீதமாக இருந்து வருகிறது!

அந்த தேசிய கீதங்களோடு இந்திய உபகண்டத்தின் தேசிய கீதத்தையும் ஒருமுறை ஒப்பிட்டுப் பாருங்கள்! அந்த விடுதலைவெறி எங்கே இருக்கிறது என்றுதேடிப்பாருங்கள்!

★

## நல்ல காலம்!

காலம் ஒரு கனி; அதைச் சமயம் பார்த்து மரத்திலிருந்து கொய்துவிட வேண்டும்.கொஞ்சம் முந்திக் கொண்டாலோ அது காயாகவே இருக்கும். நேரம் தாழ்த்தினாலோ அது அழுகிவிடும். இதோ, உதாரணம்!

இந்திய உபகண்டம் முழுமையும்ஆங்கிலேயரைஎதிர்த்து 'சிப்பாய் கலகம்' செய்வதற்கு நாளொன்றைக் குறிப்பிட்டு வைத்திருந்தார்கள். இந்த ரகசிய ஏற்பாடு ஆங்கிலேயர்கள் யாருக்கும் தெரியாது. ஆனால் மீரட்டிலிருந்த சில துருப்புகள் அவசரப்பட்டு—உணர்ச்சி வசமான காரணத்தால் 1857-ம் ஆண்டு மேமாதம் 10ந்தேதியே கலகத்தைத் துவக்கிவிட்டன. அந்த அவசரம்தான் 'கலகம்' தோல்வி யடைந்ததற்கான முதல் காரணம்.

மீரட் துருப்புகள் மட்டும் அன்றைபதினம் மௌனமாக இருந்திருந்தால் இந்திய உபகண்டத்தின் சரித்திரமே வேறு மாதிரியாக எழுதப்பட்டிருக்கும்!

★

## கலைவேந்தன்......

✶ 2-ம் பக்கத் தொடர்ச்சி

கண்டாலே ஆஸ்திகர்களுக்குப் பயம்தான். இதற்குக் காரணம் கைலாசம் இதிகாசங்களின் ஆபாசத்தையும், அட்டூழியத்தையும் மற்றவரைப் போல் மறைக்காது—ஒளிக்காது வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தியதுதான். ராஜாஜியின் நண்பரும், பெரும் பக்தரும், கீதையின் தாசானுதாசருமாகிய மாஸ்தி வெங்கடேசய்யங்கார்-தாத்தா திருமலையாச்சாரியார் முதலியோர்களுக்கெல்லாம் கைலாசம் ஒரு அதிர்வேட்டு ஆளாக இருந்து வந்தார்.

இத்தகைய பக்த சிரோன்மணிகளின் அதிகாரத்தில் சிக்கி, மொழியை வளர்ப்பதற்கு மாறாக, அதன் அழிவை வளர்த்து வந்த சாகித்ய பரிஷத்தை ஒருமுறை கைலாசம் அதனுள்ளிருந்தபடியே, 'இது மொழிவளர்ச்சி மண்டபமல்ல; செத்தவர்களின் நினைவு மந்திரம்' என்று துணிவோடு இழித்துப் பேசினார்.

அதே மண்டபத்தில் மற்றொரு முறை சாகித்ய சம்மேளனத்திற்குத் தலைமை தாங்கியபோது, தமது தலைமையுரை மூலமாக அவர் நெஞ்சிலே நெடுநாட்களாக பொங்கிப் புரண்டு கொண்டிருந்த ஆசை வெள்ளத்தை-அணையாத இதயஜோதியை—தணியாத தாகத்தை மக்கட்கடலின் முன்னே உரத்தோடும் உரத்தக் குரலோடும் எடுத்துக் காட்டினார்.

அது இது :—

"கர்நாடகத்தை ஒரு மாகாணமாக்க வேண்டுமென்பது நமது பெரும் விருப்பம். முகம்மதியரின் ஆளுகையின் கீழ் 60-70 வருடங்கள், பேஷ்வாக்களின் அதிகாரத்தின் கீழ் சில ஆண்டுகள், பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் 150 வருடங்கள், இதையெல்லாம் தாண்டி இப்போது எந்த வகையிலும் நமக்குச் சொந்தமில்லாத இமயமலை வாசிகளின் ஆட்சியின் கீழும் நாம் அடிமைகளாக இருந்தோம்—இருக்கிறோம். இந்த அநீதியை மாற்றி புதிய சரித்திரத்தை நாம் தொடங்கத்தான் வேண்டும். தட்சிண தேசத்தின் நான்கு மாகாணங்களும், போர்க்களத்தில் நிற்கும் நான்கு வகைப் படைகளைப் போல! இவைகள் ஒன்று கூடினால் மாற்றார் வியக்குமளவுக்கு நாம் மதிப்போடும் மேன்மையோடும் வாழ இயலும்.

"தமிழென்றால் என்ன-தெலுங்கு, மலையாளமானாலென்ன? எல்லாமே கன்னட மொழிக்கு அண்ணன் தம்பிகள் தானே! எல்லாமே திராவிட மொழிகள் தானே! ஒரு எழுத்துக் குறைந்தால் கன்னடம் தெலுங்காகி விடுகிறது; ஒரு எழுத்துக் கூடினால் மலையாளம் தமிழாக மாறிவிடுகிறது. கன்னடத்துக்கும் தெலுங்குக்கும் வெவ்வேறு எழுத்துக்கள் கிடையாதே! கேரளத்தின் "வர்ணமாலை" கன்னடக் "கீர்வாணி"யின் மறுபதிப்பு. இந்த இணைப்புகளுக்கும் மேலாக, நாகரீகம்—நடத்தை—அறமுறை — தெய்வ வழிபாடு முதலிய துறைகளிலும் நமக்குள் பேதமே கிடையாது.

"நாம் கன்னடியர்கள். எல்லா திராவிட பழக்கவழக்கங்களுக்கும் உட்பட்டவர்கள். எல்லா திராவிட மொழிகளுக்கும் பாதுகாவலர்கள். இன்னும் தீவிரமாகச் சொல்லப் போனால் தமிழ், தெலுங்கு, மலையாளப் பகுதிகளைக் காட்டிலும் கர்நாடகத்தில்தான் இந்த உரிமை உணர்ச்சி ஆதிமுதலே வேரூன்றி வளர்ந்து வந்திருக்கிறது.

"இதே உணர்ச்சியோடு இனியும் வாழ வேண்டும். ஏனைய பிற தட்சிண (திராவிட) பகுதிகளுக்கும் மேலாக நாமும் வாழ வேண்டும். இப்படி வாழ்வதன் மூலம் "ஐக்கிய தட்சிணம்" ஏற்படுத்த வேண்டும். அதற்காக முயல்வோமாக!"

இப்படிப் பேசிய கைலாசம் அண்ணாவின் அறிவுப் படையைச் சார்ந்தவருமல்ல; தி. மு. க. உறுப்பினருமல்ல! பின் இப்படிப்பேசியதற்குக் காரணம்? அதுதான் அவர் உள்ளத்தில் ஆதிமுதல்முளைவிட்டு, இலை தோன்றி, கிளை பரப்பிய ஐக்கிய தட்சிணம்—அதன் மறு பெயர் "திராவிடநாடு" தோன்ற வேண்டுமென்ற ஆசை!

கன்னட மொழியில் நல்ல பல இலக்கியங்களை இயற்றித்தந்து வரும் திரு ஆ. நா. கிருஷ்ணராயர் என்பவர் கைலாசத்தை ஆரியனாகக் காட்டவில்லை; திராவிடனாக ஆக்கவுமில்லை; பொதுவாக ஆரிய, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களத்தனை பேரின் ரத்தமும் அவரிடத்தில் கலந்திருக்கிறது என்றார். நமக்கு அவர் உடம்பிலே எந்த ரத்தம் ஓடியதென்பதல்ல முக்கியம். அவர் எந்த கருத்தோடு வாழ்ந்தார்—எந்த அறிவோடு மக்களுக்கு வழிகாட்டியாக நின்றார் என்பதுதான் தேவையான விளக்கம்.

அப்படி பார்க்கும்போதுதான் கைலாசம் நல்லறிஞனாக—ஞானியாக-சிந்தனையாளனாக--சீர்திருத்தவாதியாக-கலைஞனாக காட்சி தருகிறார் நமக்கு. கன்னட மொழியில் அவர் காட்டிச் சென்ற மறுமலர்ச்சி இன்று மெருகோடு வாழ்ந்து வருகிறது. நாடகத் துறையை சமூக சீர்திருத்தப் பாதையில் திருப்பிவிட்ட முதற் பெருமைகன்னடத்தில் கைலாசத்துக்கே சேரும். அவர் சிந்தித்தார்-எழுதினார்--பேசினார்—நடித்தார்—தேவையான ஆதரவின்றி செத்தார்! "கலைஞன் கைலாசம்"கஞ்சியின்றி கண்மூடினார். இன்று அவர் புகழ் எங்கும் பாடப்படுகிறது. அவரது, போலிகிட்டு, ஹோம்ரூல், டொள்ளுகட்டி, அம்மாவ்ர கண்டா, பர்ப்பஸ் போன்ற நாடகங்கள் அவரை மக்களின் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

கன்னடமொழி வளர்த்த கைலாசம்—ஐக்கிய திராவிடம் காண ஆசைப்பட்ட கைலாசம் பிறந்தது 1885-ல்; சிந்தனையிலே வெந்து, வேதனையோடு மடிந்தது1946-ல்! அவர் மறைந்தாலும், அவர் கொளுத்திச் சென்ற கலைவிளக்கு மங்காத கலங்கரை விளக்காக கன்னடத்தில் இன்றும் ஒளி வீசிக் கொண்டு தானிருக்கிறது; வாழ்க அவர் புகழ்; வெல்க அவர் ஆசை!

★

# பிறை வானம்



..பிள்ளைகள் பகுதி...

## நண்பன் எங்கே?

காலை நேரம்.

வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தான் அழகிரி. ஒருகணமும் சும்மா இராமல், 'துருதுரு'வென்று ஏதேனும் குறும்புத்தனம் செய்து கொண்டிருக்கும் அவன், இப்படி வாலை சுருட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பானேன்? நல்ல பிள்ளையாகிவிட்டானே? - அம்மாவுக்கும் அப்பாவுக்குமே ஒரே ஆச்சரியம் என்றால், பார்த்துக்கொள்ளுங்களேன்!

அழகிரி வாசலில் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. அவன் கண்கள் அடிக்கடி தெருமுனையைப் பார்த்தபடி இருந்தன. அவன் யாரையோ எதிர்பார்த்துத்தான் காத்திருக்கிறான். அவனது 'வானரப் பட்டாள'த்தைத் தேடுகிறானா? அல்லது மிட்டாய் வண்டிக்காரனை பார்க்கிறானா? யாருக்குத் தெரியும்? கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம். அழகிரியின் முகம் மலர்கிறது. ஆனால், அங்கு வருபவனோ தபால்காரன்!

தபால்காரன் வீட்டை நெருங்குவதற்கு முன்னேயே அழகிரி அவன் எதிரில் போய் நின்றான். அவன் கைகள் துடிதுடித்துக் கொண்டிருந்தன. கடைசியில் அவன் எதிர்பார்த்த கடிதமும் கிடைத்தது. அவசர அவசரமாகப் பிரித்தான். படித்தான்.

அன்பு நண்பன் அழகிரிக்கு,

வணக்கம். இந்தக் கடிதத்தில் நான் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி சொல்லப்போகிறேன். எங்கள் வகுப்பில் தமிழ் ஆசிரியர் ஒரு 'பரிட்சை' நடத்தினார். எனக்கு எத்தனை மார்க்குகள் தெரியுமா? மூர்ச்சை போட்டுவிடாதே! 90 மார்க்குகள்! வகுப்பில் நான்தான் முதல் பையன்! ஆசிரியர் என்னைத் தட்டிக் கொடுத்தார். 'இளஞ்சிங்கம்' என்று பெயர்வேறு வைத்து விட்டார். இப்போது எல்லா பையன்களும் என்னை அப்படித்தான் அழைக்கிறார்கள். எனக்கு ஒரே மகிழ்ச்சி! ஆனால், எனக்கு வெட்கமாக இருக்கும் இன்னொரு செய்தியையும் சொல்லுகிறேன். போன வாரம் உன் வகுப்பில் நடந்த பரிட்சையில் உனக்கு இருபது மார்க்குதானாம்! ஆசிரியர் கோபித்துக் கொணடாராம்! உன் அப்பாகூட அடித்துவிட்டாராமே! இதெல்லாம் முன்பின் உன்னைப் பார்த்தறியாத எனக்கு எப்படித் தெரிந்ததென்று கேட்கிறாயா? உனது வகுப்பில் படிக்கும் எனது நண்பன் ஒருவன் சொன்னான். போகட்டும்; ஏன் இப்படிக் குறைவாக மார்க் வாங்கினாய்? எனக்கு வருத்தமாய் இருக்கிறது. இனியாவது நன்றாகப் படி! உன் கடிதத்தை எதிர்நோக்கியிருக்கிறேன்.

உன் நண்பன்,
குமரன்.

கடிதத்தை படித்து முடித்தான் அழகிரி. முதலில் இருந்த ஆவல் இப்போது சோகமாக மாறியது. உடனே 'விறுவிறு' என்று காகிதத்தை எடுத்தான். பதில் எழுதினான்.

கடிதத் தொடர்பால் கிடைத்த அருமைப் பேறு நண்பனே!

கடிதம் கிடைத்தது. நீ 90 மார்க் வாங்கினாய்—நான் 20 மார்க் வாங்கினேன். உண்மை; அதற்காக என்னைக் கிண்டல் செய்யாதே! அடுத்த வாரம் மீண்டும் ஒரு பரிட்சை வருகிறது. அதில் பார் என் சாமர்த்தியத்தை!

நண்பன், அழகிரி.

✱

நாட்கள் நகர்ந்தன. விழுந்து விழுந்து படித்தான் அழகிரி.. குறும்புத்தனத்தை—விளையாட்டை மூட்டைக்கட்டி மூலையில் வைத்தான். படித்துக்கொண்டேயிருந்தான். புரிட்சையும் வந்தது; எழுதினான். மார்க்குகள் எத்தனை தெரியுமா? 95! அழகிரிக்கு கொள்ளை மகிழ்ச்சி! உடனே குமரனுக்கு தன் புத்திசாலித்தனத்தைக் குறித்து கடிதம் எழுதினான். அதிவேகமாகப் பதிலும் வந்தது.

'95 மார்க்' அழகிரிக்கு!

வணக்கம். என் தோழன் 95 மார்க் வாங்கி விட்டதில் எனக்கு ஒரே குதூகலம். இரவெல்லாம் படித்திருப்பாய். இப்படியே எல்லா பாடங்களையும் படி. 'பெரிய பரீட்சை' வருகிறதல்லவா, அதில் உன்பள்ளிக்கூடத்தில் முதல்வனாகநீயும், என் பள்ளிக்கூடத்தில் முதல்வனாக நானும் வரவேண்டும். தெரிகிறதா? மற்றவர்கள் மூக்கில் விரல் வைக்க வேண்டும். மற்றொரு விஷயம்: நீ அடிக்கடி சினிமாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறாயாமே, வேண்டாம் அழகிரி! தினம் தினம் சினிமாப் பார்த்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? படிக்கும் வயதில் இப்படிப் பார்த்தால், பிறகு 'சுமை தூக்க' வேண்டியதுதான். புரிகிறதா? அதாவது மூக்குக் கண்ணாடியை வேறு சுமந்தாக வேண்டும்! மேலும், வீட்டிலும் நிறைய குறும்புத்தனம் செய்கிறாயாமே, அதையும் குறைத்துக் கொள். அம்மாவுக்குத் தொந்தரவு கொடுக்காதே!

நண்பன், குமரன்.

அழிகிரி பதில் எழுதினான். 'பெரிய பரிட்சை' — பள்ளியில் முதல்வன்-இவையே அவன் மனக் கண்முன் வந்து நின்றன. படித்தான்; ஓயாது படித்தான். சினிமாவை மறந்தான்; குறும்புத்தனங்களை ஒழித்தான்: 'படுத்துக் கொள்ளப்பா' என்று அம்மா சொல்வதையும் கேளாமல் இரவில் வெகு நேரம்வரைப் படித்துக் கொண்டேயிருந்தான். உழைப்பு பலன் தராமலா போய்விடும்? அழகிரிதான் பள்ளியில் முதல்வன்! பையன்கள் போற்றிப் புகழ— ஆசிரியர்கள் மகிழ — அப்பாவும் அம்மாவும் தங்கள் செல்ல மகனை கொஞ்சிக் கொண்டாட—அடுத்த வகுப்புக்கு 'ஜாம் ஜாம்' என்று போனான் அழகிரி! ஆருயிர் நண்பனுக்குக் கடிதமும் எழுதினான்.

> ### நிச்சயம் !
>
> பள்ளி சென்று பலபல;
> பயிலும் தங்கை தம்பிமார்
> மெள்ள மெள்ள நாளையே
> மேதை யாவார் நிச்சயம்!

அன்புக் குமரா,

நான் வகுப்பில் முதல்வனாகத் தேறி விட்டேன். இரண்டு வருடங்கள் எட்டாவதிலேயேகிடந்த நான், எப்படி இப்படித் தேறினேன்? எல்லோரும் ஆச்சரியப் படுகிறார்கள். ஆனால் இதற்குக் காரணம் நீதான். நீ எனக்கு அடிக்கடி—கடிதத்திற்குக்கடிதம் ரோசத்தைக்கிளப்பி எனக்கு புத்தி தந்திருக்காவிடில், இன்னும் எட்டாவதுவகுப்பிலேயே கிடந்திருப்பேன்! என் வெற்றிக்குக் காரணமான உனக்கு என் நன்றி! ஆனால் அதே சமயம் ஒரு அதிசயம். இத்தனைக் கடிதங்கள் எழுதிக்கொண்டும் நாம் இன்னும் ஒருவரையொருவர் சந்தித்ததில்லை என்பதை நினைத்தால் ஆச்சரியப்படாமல் என்ன செய்வது? ஆகவே நான் உன்னைச் சந்திக்க விரும்புகிறேன். தயவுசெய்து என் வீட்டிற்கு வரமுடியுமா? உனக்கு நான் விருந்து வைக்கப்போகிறேன். மறுக்காதே! என் 'அன்பழைப்பை' ஏற்றுக் கொள்!

அன்புள்ள அழகிரி.

✱

அழகிரிக்குப் பதில் வந்தது.

சிங்கத் தம்பி அழகிரிக்கு,

கடிதம் கிடைத்தது. உன் அன்பழைப்பை ஏற்றுக் கொள்ள இயலாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன். அவசியமானால் இன்று மாலை ஆறு மணிக்கு நீ என் வீட்டுக்கு வா! நன்றி ஏற்க நான் எப்படிவருவது? நன்றி சொல்ல நீதான் வரவேண்டும். மறக்காதே! எங்கள் வீட்டுத் தோட்டத்தில் காத்திருப்பேன்.

—குமரன்.

✱

தன் புத்தகப் பை நிறையப் பழங்களுடன் நண்பனின் வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைந்தான் அழகிரி. தேடினான். அங்கே கிடந்த ஒரு நாற்காலியில் ஒரு பெரிய மனிதர் உட்கார்ந்திருந்தார். அழகிரி அவரை நெருங்கினான். பின்னால் நின்றபடியே, "குமரன் இல்லையா, சார்?" என்றான்.

"யாரது?" என்று கேட்டுக் கொண்டே அவர் திரும்பினார். மறுகணம் அழகிரி திடுக்கிட்டான். "அப்பா" என்று ஆச்சரியத்தால் கத்தினான். அங்கே உட்கார்ந்திருந்தது யாருமல்ல: அழகிரியின் சொந்த அப்பாவேதான். "நீங்கள் எங்கே அப்பா, இங்கு வந்தீர்கள்?" என்றான்.

"இது என் ஆபீசில் வேலை பார்க்கும் நண்பரின் வீடு: தினமும் இங்கு வந்துவிட்டுத்தான் நான் வீட்டுக்கு வருவேன். போகட்டும்: ...எங்கே விருந்து?" என்றார் அப்பா, சிரித்துக்கொண்டே.

"குமரனை உங்களுக்குத் தெரியுமா, அப்பா?" அழகிரி கேட்டான்.


"அழகிரி, தெரியாதா? நீ நல்ல பிள்ளையானதற்கு அந்தக் குமரனின் எழுத்துக்கள்தானே காரணம்? ஆனால் ஒரு பெரிய ஏமாற்றம்! தாங்கிக் கொள்ள தயாராகிக் கொள். குமரன் என்று யாருமே இல்லை! குமரனாக உனக்குக் கடிதம் எழுதியது நானேதான்! உன்னைத் திருத்த நான் எடுத்துக் கொண்ட இந்தப்புதியமுயற்சியில் வெற்றியே கிடைத்தது..." என்றார். அழகிரி திடுக்கிட்டான். விருந்து முடிந்தது. வீட்டிற்குத் திரும்பினர்.

★

இப்போதும் அழகிரி வகுப்பில் முதல்வன்தான். ஆனால், அவனுக்குக் கடிதங்கள் வருவதில்லை. இருந்தாலும் கொஞ்ச காலம் அவனுக்கு நண்பனாக இருந்து, அவனை முதல்வனாக ஆக்கிய அந்த 'இல்லாத நண்பன் குமர'னுக்கு அவன் நன்றி தெரிவித்துக் கொண்டேயிருக்கிறான். அவனுடைய தங்கமான அப்பாவுக்கு தன் மகனின் திறமை குறித்து எல்லையில்லா மகிழ்ச்சி!

— சொர்ணம்

## முத்துவும்-செல்வியும் (10) - விளையாட்டில் விளையாட்டு!



## கிரேக்க......

4-ம் பக்கத் தொடர்ச்சி

—புரோமித்தியஸ் யோசித்தான்; மூளையின் நரம்புகள் விம்மிப் புடைக்குமளவுக்கு யோசித்தான்! எந்த உபகரணம் மனித ஜந்துக்களை பொல்லாத மிருகங்களிடமிருந்து காப்பாற்றும்?—ஆம்; இந்தக் கேள்விக்கு புரோமித்தியஸ் பதில் கண்டுவிட்டான்.

முகத்திலே புன்னகையை பூக்கவிட்டு, கையிலே தீவட்டியுடன் சூரியனிடம் ஓடினான். சூரியன் தூங்கிக் கொண்டிருந்தபோது தீவட்டி செந்தழலைச் சிந்துமளவுக்கு அதை அவன் மீது தேய்த்தான். அவ்வளவுதான்! தீவட்டி கொழுந்துவிட்டெரிந்தது. உடனே அந்த தீவட்டியை உலகத்தின் முதல் மனிதனுக்கு வழங்கினான். புரோமித்தியசின் போற்றுதற்கரிய இந்தச் செயலால்தான் மனிதனுக்கு நெருப்பு கிடைத்தது. அந்த நேரம் முதல் மனிதனும் நெருப்பின் துணை கொண்டு, மிருகங்கள் நெருங்கி தொல்லைப் படுத்தாமல் வாழக் கற்றுக் கொண்டான்!

புரோமித்தியஸ் பூலோகத்திலே வாழ்ந்த டிட்டான்களின் வம்சத்திலே பிறந்தவன். 'தேவாசுர' யுத்தத்திலே கடவுளர் தலைவனும் சியசுக்கு உதவி செய்த காரணத்தால் அவனுக்கு அமர லோகத்து பிரஜா உரிமை கிடைத்தாலுங்கூட, அவனுடைய நோக்கெல்லாம் மனித இனத்தை மேன்மைப் படுத்த வேண்டும் என்ற போக்கு கொண்டதாகவே இருந்தது. கடமையுணர்ச்சி தவறுதவனல்லவா, புரோமித்தியஸ்! எனவேதான் அவனுக்கு இந்த பூலோகப் பாசம்!

இந்தப் பற்றும், பாசமும் சியசுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. மனிதர்களுக்காக புரோமித்தியஸ் சூரியனிடமிருந்து நெருப்பை மட்டும் திருடவில்லை; ஆத்திர மூட்டும்படி இன்னொரு செயலையும் செய்துவிட்டான்! கடவுளர்களுக்கு வழங்கப்படும் படையலிலே எலும்புத் துண்டுகள் மட்டும் இருந்தால் போதும்; சதைத் துண்டங்களை மனிதர்களே படைத்துவிட்டு எடுத்துக் கொள்ளலாம்—என்கிற கட்டுப்பாட்டையும் அவன் ஏற்படுத்திவிட்டான்! அன்று முதல் தேவர் கோமான், மனித இனத்தின் முதல் நண்பனை-நெருப்பு வழங்கி மிருக நிக்ரகம் செய்ய உதவிய நேசமிகு புரோமித்தியசை-பழி தீர்த்துக் கொள்வதென்று வெஞ்சினம் கூறினான்!

அந்தப் பழிவாங்கும் செயலுக்குப் பாயிரம் படிப்பதைப் போல, ஆண்களாலேயே நிரப்பப்பட்டிருந்த பூலோகத்துக்கு சியஸ் ஒரு பருவ மங்கையை—மனித இனத்தின் முதல் தாய்க்குலத்தை—அனுப்புவதென்று முடிவு செய்தான். பெண் பேய்க் குணம் கொண்டவள். அவள் அடியெடுத்து வைத்தாலே அநீதியும் அவதூறும் பூலோகத்துக்குக் குடி போகும். அதன் பிறகு புரோமித்தியஸ் மனித இனத்தைத் தூய்மைப்படுத்த முடியாதல்லவா?

—இப்படித்தான் சியசின் மனச்சாட்சி பேசிக் கொண்டிருந்தது. அதன் படியே சியஸ் அழகிய நங்கையொன்றை சிருஷ்டித்தான். அவளை ஒவ்வொரு கடவுளிடமும் அனுப்பி வைத்தான். இறுதியில் கடவுளர் யாவரும் ஒன்றுகூடி பாண்டோரா என்னும் அந்தப் பைங்கொடியிடம் பேழை யொன்றைத் தந்தனர். "பேதைப் பெண்ணே! இந்தப் பேழையைத் திறக்காதே! மூடிய வண்ணமே [illegible] வைத்து வந்தால் நீ பெரு[illegible]யினுள்ளே என்ன இருக்கிறதென்று தெரியாத பாண்டோராவும் அதை வாங்கிக் கொண்டாள்.

புரோமித்தியஸ் வெளியில் போயிருக்கிற சமயமாகப் பார்த்து சியஸ், மூடர் உலகத்து ஏகப் பிரதிநிதியாம் எப்பிமித்தியசிடம் பாண்டோராவை அனுப்பிவிட்டான். "சியசுடைய எந்த அன்பளிப்பையும் ஏற்றுக் கொள்ளாதே!"—என்று கடுமையான உத்தரவு போட்டுச் சென்ற புரோமித்தியசின் வார்த்தைகளையும் மதிக்காமல், எப்பிமித்தியஸ் பாண்டோராவை—பார் போற்றும் முதல் பாவையை பூமிக்கு அனுப்பினான்!

பாண்டோரா அழகானவள். ஆனாலும் அவளிடம் இன்றைய பெண்டிர் குலத்துக்குரிய அத்தனை பண்புகளும் ஒருங்கே பொருந்தியிருந்தன! ஆடம்பரத்தைக் காமுறும் போக்கு-அவசரத்துக்கு அடிபணியும் மனோ நிலை—இவைகளை உருவாக்கித் தரும் உலைக்கூடமாக அவள் திகழ்ந்தாள்.

தேவர் உலகத்து ஆணையையும் மீறி—உள்ளே என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தால் பாண்டோரா பேழையைத் திறந்தாள்—சியசின் சூதறியாத சித்திரப் பாவை மூடியை அகற்றினாள்...அய்யகோ! அந்தக் கோரக் காட்சியை என்னென்று வர்ணிப்பது? பாண்டோரா 'கோ' வென்று கத்திவிட்டாள் — மூடியைத் திறந்து கொண்டு, ஓங்காரக் கூச்சல் கிளப்பி 'துக்கமும், துரோகமும்' மண்ணிலே குதித்தன; மனித சமுதாயத்துக்கு இது நாள்வரை அன்னியமாயிருந்த தீராத நோய்களும், ஆராத புண்களும் விண்நோக்கி எழுந்தன; மனிதர்களின் உடம்பிலே புகுந்தன!

என்ன செய்வாள் பாண்டோரா? "அவசரப்பட்டேனே; ஆபத்தை அணைத்துக் கொண்டேனே!"—என்று அலறித் துடித்தாள். உடனே 'கப்' பென்று பேழையை மூடினாள்! நல்ல வேளையாக 'நம்பிக்கை' என்னும் மாமருந்து மட்டும் பேழையிலேயே தங்கிக் கொண்டது. "நம்பிக்கை செத்த தினமே மனிதனும் செத்துப் போகிறான்"—என்று பாடி, நம்பிக்கைக்கு வாழ்த்துக் கூறினானே புது உலக வானம்பாடி ஷெல்லி, அந்த நம்பிக்கை மட்டும் நீங்காதிருந்தது. பாண்டோரா அப்போதாவது பேழையை மூடிய காரணத்தால்!

பாண்டோரா பேழையைத் திறந்த நாள் மனித சமுதாயத்தின் துக்க நாள்! மகிழ்ச்சி மறைந்து மனித இருதயத்திலே நெகிழ்ச்சியை நுழைத்துவிட்ட சோக நாள்! நட்பும், நேசமும் மறைந்து, வேதனையும் வெறிச் செயலும் அவதரித்த அவல நாள்! சாவேயறியாத சமுதாயத்துக்கு நோய்களை அறிமுகப்படுத்திய தீநாள்! அந்த நாள் தோன்றியிராவிட்டால் இந்த நாள் மனித குலம் இப்படி வாட நேர்ந்திருக்காது என்று ஒப்பாரி வைக்கிறது, கிரேக்க புராணம்! சஞ்சலம் தெரியாது வாழ்ந்த ஜனக் கூட்டத்தை, முட்டாள் தனத்தால் முணக வைத்து விட்டானே—என்று எப்பிமித்தியசைக் குற்றமும் சாட்டுகிறது!

இதுதான் கிரேக்க புராணத்து மனித உற்பவ காண்டம்—இன்று அதைப் படிக்கிற மக்கள் உலகத்தின் ஆதி உயிர்கள் டிட்டான்கள் என்றோ, சைக்ளொப்ஸ்—என்றோ சொல்வதில்லை—டார்வின் சித்தாந்தத்தையே கேள்வி கேட்கிற அளவுக்கு அவர்களுடைய விஞ்ஞான அறிவு வளர்ந்திருக்கிறது!

## எதிரொலி......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

அரசுவின் கூக்குரல் கேட்டு அருகில் வேலை செய்து கொண்டிருந்த பெரியவர் ஓடி வந்தார். காயத்திலிருந்து பெருகும் இரத்தத்தை கைகளால் அமுக்கிப் பிடித்துத் தடுத்தவாறு அவனைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்தார்.

காலில் பலமான கட்டுடன் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தான் அரசு. ஏக்கமுடன் கனகம் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். நேரம் செல்லச் செல்ல அவனது உடம்பு தணலாகக் கொதிக்க ஆரம்பித்தது.

இரவில் ஏதெல்லாமோ புலம்பினான். ஒன்றும் தெளிவாக இல்லை. இருந்தும் 'சின்னம்மா நானிருக்கேம்மா - நீ கவலைப்படாதேம்மா. உன்னை நான் காப்பாத்தறேம்மா' -இம்மாதிரிச் சொற்கள் தெளிவுபடக் கேட்காமலும் இல்லை. நடுங்கும் மதலையை அணைத்துக் கொண்டாள்.

★

அதி காலையில் ஜுரம் இறங்கியது. அரசுவின் தேகம் வியர்க்க ஆரம்பித்தது. இக் குறிகள் கனகத்துக்கு ஆறுதலைக் கொடுத்தன. இறுகக் கட்டியிருந்த அவனது ஆடையை சிறிது நெகிழ்த்து விட்டாள். அவனது இடுப்பினருகில் ஏதோ வொன்று தென்பட்டது. முட்டாக வேட்டியில் முடிந்து வைத்திருப்பதுதெரிந்தது. முதுகில் உறுத்தக் கூடாதே என்று அதையும் அவிழ்த்து விட்டாள். கசங்கிய காகிதக் கூடு ஒன்று வெளியே விழுந்தது. திகைத்தாள்; உள்ளே ஒரு சிறு கடிதம் – பிரித்தும் பார்த்தாள். தனக்கு வந்தது அது! ஆச்சரிய மடைந்தாள். ஆவலுடன் படிக்க ஆரம்பித்தாள், அவளைச் சுற்றிலும் பூமி கிடுகிடென்று நடுங்குவது போலிருந்தது.

"தங்கள் கணவர் துப்பாக்கிப் பிரயோகத்தில் குண்டடிபட்டு இறந்து விட்டார். அவர் விட்டுச் சென்ற அடையாளங்கள் தவிர உடல் கிடைக்கவில்லை. லக்ஷியத்திற்காக தன்னையே பணயம் வைத்த ஒரு வீரனின் மனைவி நீங்கள் என்பதை எண்ணி மனதை சாந்தப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம் ..."

செல்லமணியிடமிருந்து வந்திருந்தது அது. சாவோலையைத் தூக்கிக் கொண்டு. கீழே விழாதிருக்க கட்டில் கம்பை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். கைகள் கட்டிலுடன் சேர்ந்து வெட வெட வென்று நடுங்கின. - அரசுவை வெறித்துப் பார்த்தாள். சிறிது வெளிறித் தோன்றும் அச் சின்னஞ் சிறு முகம் அமைதியில் ஆழ்ந்திருந்தது.

இக் கடிதத்தின் எதிரொலிதான் சிறுவனின் மன மாற்றத்துக்குக் காரணம். தன்னுடைய சிற்றன்னை, கணவனின் சாவை தெரிந்து கொள்ளாதிருக்க வேண்டி, தந்தையின் சாவை தானே தாங்கிக் கொண்டான்.

தன் வாழ்வு பாழ்பட்டு விட்டது தெரியாதிருக்க, இச் சிறுவன்-தன்னுடைய ஆசைக் கணவனின் அன்புச் செல்வம்—தனது சொந்த தந்தையின் மரணத்தை அவனுடைய இளம் இதயத்திலேயே அடைத்து வைத்துக் கொண்டான். கனகத்தின் தாய்மையுள்ளம் துடி துடித்தது.

நினைக்க முடியவில்லை. எண்ண முடியவில்லை. தாங்க முடியவில்லை. "கண்ணே" என்ற அலறல் பீறிட்டுக் கொண்டு கிளம்பியது. வாரி யெடுத்து அணைத்துக் கொண்டாள் அரசுவை.

"அம்மா!"

"கண்ணே!"

இவைகளிடயே விம்மலும் அழுகையும் தவிர வேறு எதையும் கேட்க முடியவில்லை.

சிறிது நேரம் சென்றிருக்கும், தாயின் தோளின் மீது சாய்ந்திருக்கும் தனது முகத்தைத் தூக்கி கண்களைத் திறந்தான் அரசு. அவனது பார்வை அப்படியே நிலைத்து நின்று விட்டது.

முடமான காலுக்கு முட்டுக் கொடுத்தவாறு, மாணிக்கம் வாசலில் நின்று கொண்டிருந்தான். மகிழ்ச்சிப் பெருக்கால் அவனிரு கன்னங்கள் வழியாக கண்ணீர் பெருக்கெடுத்தோடிய வண்ணமிருந்தது.

"அப்பா!"

அரசுவின் ஆனந்தக் கூச்சல்! கனகம் திரும்பிப் பார்த்தாள். மறு கணம் மாணிக்கம் மகனையும் மனைவியையும் அப்படியே ஆவி சேர்த்தணைத்துக் கொண்டான்.

"நான் சாகவில்லை, கனகம்! சண்டாளர்கள் பிடியிலிருந்து மயக்கமுற்ற நிலையிலேயே நான் மனிதப்பண்பு கொண்டவரொருவரால் எடுத்துச் செல்லப் பட்டேன் ..."—அவன் கூக்குரலிட்டான். கட்டித் தழுவினான். அரசுவின் முகத்தில் முத்தங்களாகச் சொறிந்தான்!

★

லட்சுமி நாடக மன்றத்தின்
நிதிக்காக
பெரம்பூர் நியூ ஹாலில்
லட்சுமி நாடக மன்றத்தாரால்
நடிப்புப் புலவர்
கே. ஆர். ராமசாமி
அவர்கள் தலைமையில்
உடைந்த சிலை
என்னும் நாடகம் நடைபெறும்.

நெல்லையப்பர்
கல்நிலைய பள்ளிக்கூட உதவி நிதி.
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன் நடிக்கும்
'இன்பக் கனவு'
16—4—55 கரூர் டாக்கி டாக் தியேட்டர்
17—4—55 மணப்பாறை கனி திறந்த அரங்கம்
19—4—55 பெரியகுளம் குமாரவேல் அரங்கம்
அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ. அவர்கள்




> முகிழ்த்து வரும் கலைக்கு ஒரு பயங்கரமான எதிரி இருக்கிறன். அவன்தான் 'அறியாமை'!
>
> — பென் ஜான்சன்.

## ரேவதியில் ஒரு நாள்

அன்பொழுகும் முகம்—அருளொழுகும் விழிகள்-அந்த மங்கை நல்லாள் செய்வதறியாது விழித்துக் கொண்டிருக்கிருள். அவளைச் சுற்றிலும் காட்டு மனிதர்கள் கூட்டம்!

அந்தச் சிட்டுக் குருவிச் சுற்றிச் சுற்றி வருகின்றன, அந்தக் கழுகுப் பட்டாளம்! பயங்கரமான கீதத்தை அவர்கள் வாய் முணமுணக்கிறது!

அந்த ஓநாய்களிடமிருந்து அந்த உள்ளங்கவர் செல்வியை விடுவிப்பதற்கு யாருமே கிடையாதா?

ஏன் கிடையாது? அதோ; ஒரு வாலிபன்! வலிமை கொண்ட தோள்கள்! ஆர்வத்தை தேக்கி நிற்கும் விழிகள்! வாலிபத்தை சுமந்தபடி துடி துடித்துக் கிடக்கும் அரும்பு மீசை!

பின்னர் ஏன் அவன் அந்தக் கெடுமதியாளரைத் துரத்தியடித்து, அந்த வேல்விழியாளைக் காப்பாற்றியிருக்கக் கூடாது?

அய்யகோ; அந்த வீரத்தின் உருவம் பாறையொன்றில் நெஞ்சுக் கூட்டிலே வலியெடுக்கும் அளவுக்கு, இறுகக் கட்டப்பட்டிருக்கிறது. அவன் துடிக்கிருன்; துவளுகிருன்! கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு கனிமொழியாளைக் காப்பாற்றிட என்னென்னவோ செய்து பார்க்கிருன்!

முடிவு...?

கட்டுகள் தளரவில்லை. பூங்கொடியாள் அந்தப் புலிக்குட்டிகளுக்குத்தான் பலியாக வேண்டுமா? இவர்கள் எப்படித் தப்புவார்கள்?

—இந்தப் புதிரையெல்லாம் விரைவிலே வெளிவரப் போகும் 'குலேபகாவலி' விடுவித்துவிடும்.

ஆனால் ஒன்றைமட்டும் சொல்லிவைக்கிறேன். அன்றைய படப் பிடிப்பு முடிவடைந்ததும், அந்தக் காட்டு மனிதர்கள், அவர்கள் இத்தனை நேரமும் சூழ்ந்துகொண்டிருந்த டி. ஆர். ராஜகுமாரிக்கு வணக்கம் சொல்லிவிட்டு தாங்களாகவே நகர்ந்துவிட்டனர். கட்டுகளை அவிழ்க்கமுடியாமல் விழிகளாலும், துடிக்கும் மீசையாலும் பேசிக்கொண்டிருந்த எம். ஜி. ஆரை டைரக்டர் ராமண்ணாவே ஒரு 'கப்' காப்பியையும் கொடுத்து; கட்டுகளையும் அவிழ்த்து, விடுதலை செய்தார்!

ராஜகுமாரி தயாரித்து, அவரே முக்கிய பாத்திரமேற்று நடிக்கும் இந்தப் படத்தை டி. ஆர். ஆரின் குடும்பப்படமென்றே அழைக்கலாமென்று தோன்றுகிறது. ஏனெனில் அவருடைய சகோதரராம் டி. ஆர். ராமண்ணாவே இதை டைரக்ட் செய்கிருர். அவருடைய இன்னொரு சகோதரராம் டி. ஆர். ராஜாபாதர் கேமராவைக் கையாளுகிருர். வசனம் தஞ்சை ராமையாதாஸ் எழுதுகிருர்.

இன்னும் இரண்டொரு மாதங்களிலேயே குலேபகாவலியை திரைக்கு அனுப்பி வைக்க ஆர். ஆர். பிக்சர்ஸார் இரவு பகலாக உழைத்து வருகிருர்கள். பிரகாஷ் ஸ்டுடியோவிலும், ரேவதியிலுமாக படப்பிடிப்பு நடந்து வருகிறது! ★

## வெள்ளி வீதி

● நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியின் சொந்தக் கம்பெனியாம் விஜயா பிலிம்சார் 'நீதிபதி' படத்தை வேகமாக தயாரித்து வருகின்றனர். ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்யும் அந்தப் படத்துக்கு ஏ. கே. வேலன் வசனமெழுதுகிருர்.

● மேகலா பிக்சர்ஸ்' தயாரிக்கும் அறிஞர் அண்ணாவின் பொன்னோவியம 'ரங்கோன் ராதா'வுக்கான பூர்வாங்க வேலைகளெல்லாம் முடிந்துவிட்டன. இப்போது படத்திற்கான நடிகர் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

● நேஷனல் புரொடக்ஷன்சார் தங்களுடைய 'ராஜா ராணி'யின் நடிகர் பட்டியலை கொஞ்சம் நீட்டியிருக்கிறார்கள். கணேசன், ராஜேந்திரன், பத்மினி ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்தில், இப்போது கலைவாணர் என். எஸ். கே.யும், மதுரமும் நடிக்கப் போகிருர்கள். இதை பீம்சிங் டைரக்ட் செய்கிருர்.

● ஆசைத்தம்பி கதை, வசனமெழுதும் மெர்க்குரி பிலிம்சாரின் அடுத்த படத்தை காசிலிங்கம் டைரக்ட் செய்கிருர். இதில் சிவாஜி கணேசன், ஸ்ரீராம், ஜி. வரலட்சுமி ஆகியோர் நடிப்பார்கள்.

● முன்பு 'உலகம்' எடுத்த மூனுஸ் பிக்சர்ஸ் இப்போது மீண்டும் படமெடுக்கப் போகின்றனர். இது மூன்று மொழிகளில் தயாராகுமாம. மூன்று ஸ்டுடியோக்களில படப்பிடிப்பு நடக்கும் விதத்தில் ஏற்பாடு செய்யப் போகிருர்களாம். படத்தின் பெயர் 'தேவசுந்தரி' என்றும் செய்தி கிடைக்கிறது.

● 'முல்லைவனம்' எடுத்த அரவிந்த் பிக்சர்ஸ் மீண்டும், 'வாழ்வது எப்படி?'—என்ற படத்தை தயாரிக்கப் போகிருர்கள்.

● சமீபத்தில் வெளியாகப் போகும் ஒரு 'திட்டல் பட'த்திற்கான விளம்பரங்களில் வல்லின மெல்லின எழுத்துக்கள் கூட தெரியாத அளவுக்கு விளம்பரம் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்துப் பிழை கொண்ட அந்த விளம்பரங்களை கதாசிரியரேதான் எழுதிக் கொடுத்தாராம். அச்சுக் கோர்ப்பதில் அல்ல; ப்ளாக்கிலேயே தமிழ் அப்படிக் கொலையாகியிருக்கிறது! தமிழ் சரியாக எழுதத்தெரியாதவர்கள் எல்லாம் வசனம் எழுத முன்வரும் இந்த நிலையை நினைக்கும்போது "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை"-என்று தொடங்கும் தனிப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது!

● அண்ணா அவர்களின் அரிய முயற்சியால், ஏழை மாணவர்களுக்கு உதவி அளிப்பதற்காகத் துவக்கப்பட்ட காஞ்சி கலைவிழா வெற்றிகரமாய் முடிந்தது. கலைவிழாவின் மூலம் மொத்தத்தில் ரூ. 5,000 கல்வி நிதிக்காகச் சேர்ந்திருக்கிறது. அந்த விழாவில் தியாகராயர் கல்லூரி கலைக் குழுவினரும், மனோகர் குழுவினரும், சிறப்பாக கலைவாணர் என். எஸ். கே., எம். ஜி. ஆர்., ராஜேந்திரன் குழுவினர்களும் கலந்துகொண்டனர்.

● மாநில மாநாட்டுக்காக தி. மு. கழகம் 25 ஆயிரம் ரூபாய் திரட்ட வேண்டுமென்று பேரூர் பொதுக்குழு முடிவு செய்திருக்கிறதல்லவா? அதன்படி ஏப்ரல் 24-ந் தேதி மாலை, சென்னையில் எம். ஜி. ஆர். 'பகைவனின் காதலி' நாடகம் நடத்தித்தர இசைந்துள்ளாராம்!



மண் துறந்த மணிமேகலையோ, இந்தக் கண் நிறைந்த காரிகை?
—நேஷனல் புரோடக்ஷன்ஸ் 'ராஜா ராணி'யில் பத்மினி

## ஏன்?

இந்தியில் எடுக்கப்படும் 'நயா ஆத்மி' (வேலைக்காரி) பட விளம்பரங்களில் கதாசிரியரின் பெயர் வெளியிடப்படாதது ஏன்?

## 'எழுத்தாணி'யின்

# கடைசிப் பக்கம்

**இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:**
**(●) மணிவேலன்; பூந்தோட்டம்.**

கே. எ. எம். ஆர்;
முத்துப்பேட்டை.

(?) சோஷலிசம் பேசிய ஜெயப்பிரகாஷ் அரசியலில் துறவறம் பூண்டாரே; இப்போது 'சோஷலிச் மாதிரி' பேசும் நேருவும் அவரைப் போலவே ஆகிவிடுவாரா?

**யார் கண்டது? தாண்டன் போன்ற இந்தி வெறியர்களின் சூழ்ச்சியால் நேருவும் அரசியல் துறவறம் பூண்டால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

வெ. அ. ராசகோபால்;
அவிசாவெல்ல; சிலோன்.

(?) தென் இந்தியாவில், 'பாரத ரத்ன'ங்கள் அதிகம் இறக்குமதியாகிவிட்டதாமே; இனிமேல் இரத்தினங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்குமா?

அப்படியல்ல நண்பரே! பொது மக்களிடம் மதிப்பிழந்த ஆச்சாரியார் போன்ற பித்தளைகளுக்கு, "பாரத ரத்தினக்களை"ப் பதித்தாவது, மதிப் பேற்ற முடியாதா என்று பார்க்கிறது பண்டிதர் அரசாங்கம்!

கோ. பாலன்;
காவேரிப்பட்டணம்.

(?) சமூகத்தை சீரழிப்பவர்கள்—இன்று யார்? அன்று யார்?

இன்றும், அன்றும், திராவிடர் இயக்கம் தோன்றியிராவிட்டால் என்றும் — 'அவாள்' கூட்டம் தான்!

கோவிந்தராசு; திருக்கண்ணங்குடி.

(?) ஒரு கட்சியின் கொள்கை நல்ல முறையில் வளர, அதற்குத் தேவைப்படுவது எதிர்ப்பா? ஆதரவா?

எதிர்ப்பையும் ஏணிப் படிகளாக அமைத்துக் கொண்டு, ஆதரவுக் கொடி நாட்டினுல்தான் அந்தக் கொள்கைக்கு வைரம் பாய்ந்திருக்கிறது என்று பொருள்! கொள்கை என்று ஒன்று பிறந்தாலே அதற்கு நல்லோரின் ஆதரவும், புல்லோரின் எதிர்ப்பும் இருப்பதுதான் வரலாறு கண்ட உண்மை!

இலா. நே. அஞ்சி; பொள்ளாச்சி.

(?) காரைக்குடி கம்பன் விழாவுக்கு சுப்ரமணியத்தை அழைத்து, "கம்பனும், ஐந்தாண்டுத் திட்டமும்" என்னும் பொருள் பற்றி பேசவைத்திருந்தால்...

அப்போதுகூட நம்மால் 'தாழும் தெற்கு — வாழும் வடக்கு' என்னும் தத்துவத்தை மெய்ப்பித்திருக்க முடியும்!

அன்பழகன்; பூவாளூர்.

(?) நல்லறிவாளர் என்று கருதப் படுவோர் சிலர் எந்தக் கட்சிப் பற்றும் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

அவர்களெல்லாம் 'அரசியல் மரக் கட்டைகள்'! அப்படியிருந்தால் தான் எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் நன்மைகளை அறுவடை செய்தபடியே காலம் கடத்தலாம்!

மம்சாலி; சுல்தான்பேட்டை.

(?) பண ஆசை இல்லாதவர்கள் யார்?

வயிறு இல்லாதவர்கள்!

(?) முயற்சியே இல்லாமல் முன்னேற முடியுமா?

எப்படி முடியும்? சால் இல்லாமல் ஏற்றம் அமைக்க முடியுமா?

சீனுவாசன்; காஞ்சி.

(?) தற்போழுது நாட்டிற்கு அரசியல் மேதை தேவையா? சீர்திருத்தவாதி தேவையா?

சீர்திருத்த நோக்கு கொண்ட அரசியல் மேதைதான்! அவன்தான் வாளும், கேடயமும் ஒருங்கே கொண்ட போர் வீரனைப்போல இருப்பான்—பகைவன் தொடுக்கும் பாணங்களைத் தாங்கவும் முடியும்—தாக்கவும் முடியும்!

சி. மோகன்; விழுப்புரம்.

(?) காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தின் அரண் எது?

விந்தியத்துக்கு அப்பால் டாட்டா, பிர்லாக்கள் எழுப்பியிருக்கும் காந்தியச் சுவர்தான்!

(?) கவர்னர் பதவிக்கும், பிரதமர் பதவிக்கும் உள்ள வித்யாசம் என்ன?

கவர்னர் பதவிக்கு 'கைநாட்ட'த் தெரிந்தவர்களே போதும்! பிரதமர் பதவிக்கோ கொஞ்சம் பேசத் தெரிய வேண்டும்!

● மணிவேலன்; பூந்தோட்டம்.

(?) நேரு ஊமையாக இருந்திருந்தால்...?

இந்திய உபகண்ட சரித்திரத்தில் வெறும் சொற்களல்ல—செயல்கள் இடம் பெற்றிருக்கும்.


## 'முரசொலி' வழங்கும்

தென்னகத்து வானம்பாடி—
நீடு துயில் நீங்கப் பாடிவந்த புது நிலவு—

**கவிஞர் பாரதிதாசன் அவர்களின்**

**பிறந்த நாள் சிறப்பிதழ் வெளியிடுவதை**

**'முரசொலி'**

பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது!

★ டாக்டர் சோமசுந்தர பாரதியாரின் பொன்னுரை வாழ்த்துடன் பரிமளிக்கும்!

நாவலர் நெடுஞ்செழியன்
பேராசிரியர் அன்பழகன்
ஜீவானந்தம்
நாரண-துரைக்கண்ணன்
கவிஞர் சுரதா
கவிஞர் வாணிதாசன்
கருணனந்தம்

—மற்றும் பல தமிழறிஞர்களும், பெரும் புலவர்களும் எழுதுகிறார்கள்.

**விலை 3 அணு**

**22—4—55 அன்று உங்களூரில் கிடைக்கும்!**

அதிகப் பிரதி விரும்பும் விற்பனையாளர்கள் உடன் தெரிவிக்கவும்!


## உங்கள் பார்வை

'உங்கள் பார்வை'க்கு ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. வாசக நண்பர்களின் உற்சாகம் கண்டு பெரிதும் மகிழ்ச்சி! மீண்டும் சொல்கிருேம்; கடிதங்கள் யாவும் விமர்சன நோக்கு கொண்டதாய் அமைய வேண்டும்.

இன்னுெரு சுவையான செய்தி! இந்தப் பகுதியிலே பல தலைப்புகளைத் தந்து, அதைப்பற்றி வாசக நண்பர்களது ஆராய்ச்சியை வெளியிட்டு, அவைகளிலே சிறந்த கடிதத்துக்கு பரிசு தரலாமா என்றுகூட யோசித்துக் கொண்டிருக்கிருேம். விபரங்களை விரைவில் தருகிருேம்.

இந்த வாரம் முரசொலி எல்லா வாரத்தையும்விட நன்ருக அமைந்திருக்கிறது. ஆனுல், அண்ணு கருணுநிதியின் புதையல், மணி மகுடம் இல்லையே என்ற வருத்தம்தான். அதைவிட வருத்தம்; அவரின் போட்டோவைக் கண்டதும் என் மனம் திகில் அடைந்தது.

—எம். முனுசாமி
அமைந்தகரை.

✶

'முரசொலி'யின் புதிய அம்சங்கள் வரவேற்கத்தக்கன....'தாரையின் கனவு' சிறுகதையில் தாரா ஏன் தன் காதலனுக்குக் கால் இல்லாதது கண்டதும் ஓடிவிடுகிருள்? இது தியாக மனப்பான்மை சிறிதும் இல்லாத 'இருபதாம் நூற்ருண்டு' காதலை விளக்குகிறது...'கிரேக்க புராண'த்தில் படங்கள் வெளிவந்தால் இன்னும் நன்ருக இருக்கும்... 'திரும்பிப்பார்' எங்களுக்கு ஓர் அரசியல் அரிச்சுவடியாக இருக்கட்டும்!

—தனபால்;
தி. நகர்.

✶

முரசொலியின் முதல் பக்கத்தில் கிரேக்க புராணத்தை வெளியிட்டிருக்கிறீர்கள். டெமீட்டரின் வரலாறு சுவை உள்ளதாக உள்ளது.

'புலியும் புள்ளிமானும்', புழுங்கிச் சாகிருர் பிரகாசமும் நன்ருக உள்ளது.

கடைசிப் பக்கத்தை முதலில் படிக்க வேண்டும் என்பது என் கருத்து.

—பொ. இளங்கோவன்;
கோபி.

✶

பிசாசு, பூதக் கதைகளாகவே படித்துப் படித்து தங்கள் உள்ளத்திலே கிலியை உண்டாக்கிக் கொண்ட நம் 'அரும்பு'களை, "அன்பு காட்டு—அறம் செய்; அஞ்சாதே" என அறிவின் வழியிலே, கை கொடுத்து அழைத்துச் செல்கிறது, பிறைவானம்!

—நா. ராமகிருஷ்ணன் நாயர்,
குளித்தலை.


Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.